Registered as a Newspaper
பக்கங்கள் 16+8 விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 39 | ஞாயிற்றுக்கிழமை | கார்த்திகை 17 ஆம் நாள்
கதிர் : 07 | 03 டிசெம்பர் 2023 | வள்ளுவர் ஆண்டு 2054

முச்சந்தி முரளி



"கட்சிப் பிரச்சினையே தீர்க்க வழியில்லை அதுக்குள்ள சனத்தின்ரை பிரச்சினையை எங்க தீர்க்கப் போகினம்?"



தமிழ் அரசுக் கட்சிக்கு

# போட்டியின்றி புதிய தலைவர்; வேட்பாளர்களுடன் பேச்சு!

மாவை. சேனாதிராசா தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், டிசெம்பர் 3**

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் தெரிவுக்கு மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு மனுத்தாக்கல் செய்தோரை, பொதுக்குழுக்கூட்டத்துக்கு முன்பதாக அழைத்துப் பேசி, போட்டியின்றி இணக்கமான முறையில் தலைவரைத் தெரிவுசெய்ய முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா, 'உதயன் பத்திரிகைக்குத்' தெரிவித்தார்.**

15

## பருத்தித்துறையில் கனமழை!

யாழ்ப்பாணம், டிசெ. 3
நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்றுச் சனிக்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணித்தியாலங்களில் யாழ்.மாவட்டத்தில் பருத்தித்துறைப் பகுதியிலேயே, அதிகூடிய மழை வீழ்ச்சியாக 79.8 மி.மீ. பதிவாகியுள்ளதாக, திருநெல்வேலிவானிலைஅவதான நிலையப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார். (அ-ஒ-66)

## ஊடகர்கள் போராட்டம்!

வவுனியா, டிசெ. 3
படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரியும் ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராகவும் வவுனியா ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக 'கவனவீர்ப்புப் பேரணி நேற்று முன்னெடுக்கப்பட்டது.
இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற தரப்புகள் தமிழ் ஊடகங்களை அடக்கியாள நினைப்பது வழமையான தொடர்கதையாகவே இருந்து வருகின்றது. வவுனியாவில் கடமையாற்றிவரும் பிராந்திய ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாக பொலிஸாரின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றார்கள். ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக தொடர்ச்சியாகக் குரல் கொடுப்போம் என்பதை அதிகாரத் தரப்புக்கு தெரியப்படுத்துகின்றோம் என்று போராட்டத்தில் பங்கேற்ற ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.
(அ-ஒ-110)





## விபத்தில் இளைஞன் சாவு!

யாழ்ப்பாணம், டிசெ. 3
யாழ்ப்பாணம், பருத்தித்துறை பிரதான வீதியில் அச்சுவேலி நாவல் காட்டுப்பகுதியில், இடம்பெற்ற வீதி விபத்தில் ஆவரங்காலைச் சேர்ந்த சிவனேஸ்வரன் சியாந் (வயது-22) என்ற இளைஞர் உயிரிழந்துள்ளார்.
நேற்று மதியம் இந்த விபத்து நடைபெற்றது.
பிரதான வீதியில் பயணித்த மோட்டார்சைக்கிள், விற்பனை நிறுவனத்துக்குச் சொந்தமான 'பட்டா' வாகனத்

08

ஒதியமலைப் படுகொலை

## நினைவேந்தலைக் குழப்பிய பொலிஸ்!

முல்லைத்தீவு, டிசெ. 3
ஒதியமலைப் படுகொலை நினைவேந்தல் உணர்வுபூர்வமாக நேற்று கடைப்பிடிக்கப்பட்ட போது ஒட்டுசுட்டான் பொலிஸார் நிகழ்வில் புகுந்து குழப்பம் விளைவித்துள்ளனர்.
1984ஆம் ஆண்டு டிசெம்பர் 2ஆம் திகதி அதிகாலைவேளையில் ஒதியமலைக்குள் புகுந்த இராணுவத்தினரும், சிங்களக் காடையர்களும் அங்கிருந்த இளைஞர்கள் மற்றும் ஆண்களை சனசமூக நிலையத்துக்கு வரவழைத்து அவர்களது ஆடைகளைக் களைந்து 27 பேரை சுட்டும், வெட்டியும் மிலேச்சத்தனமான

08

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
அதிகபட்ச முற்பணம்
130,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

மாவீரர்நாளைக் கடைப்பிடித்த

## பல்கலை மாணவர், பீடாதிபதி; எதிராக நடவடிக்கை எடுக்குக

விஷமத்தனமான கடிதம் அனுப்பிவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 3
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் மாவீரர் நாளைக் கடைப்பிடித்த மாணவர்களுக்கு எதிராகவும், அந்த நிகழ்வுக்கு அனுமதி வழங்கிய பீடாதிபதிக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்குமாறு, பொலிஸ்மா அதிபர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் உட்படப் பலருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
பொறியியல் பீடத்தின் சிங்கள - தமிழ் மாணவர் ஒன்றியம் எனக் குறிப்பிட்டு இந்தக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
அந்தக் கடிதத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்

03



# சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நீரில் மூழ்கியது சந்தை வியாபாரிகள் விசனம்

கிளிநொச்சி, டிசெ. 3

கடந்த சில தினங்களாகப் பெய்துவரும் கடும் மழையால் கிளிநொச்சி தருமபுரம் பொதுச்சந்தை வெள்ளநீரில் மூழ்கியுள்ளது என்று வியாபாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தருமபுரம் பொதுச்சந்தையில் வெள்ளநீர் வழிந்தோட முடியாது சந்தை வளாகத்தை சுற்றித் தேங்கிக் காணப்படுகிறது.

இதனால் சந்தையில் வியாபார நடவடிக்கை பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. கட்டடத்தின் கூரையிலிருந்து மழைநீர் ஒழுகி வருகின்றது.

சந்தையிலுள்ள குறைபாடுகளை நிவர்த்திக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-27)

## சமல் இரட்டை வேடம்

கொழும்பு, டிசெ.3

சிறப்புரிமைக் குழுத் தலைவர் சமல் ராஜபக்ச இரட்டை வேடம் போடுகிறார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறப்புரிமை மீறல் சம்பவம் நடந்தால் உடனடியாக அந்த விவகாரத்தை ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைக் குழுவுக்கு அனுப்புவது சபாநாயகரின் பொறுப்பாகும். சபாநாயகர் அதைச் செய்யாமல் அஜித் ராஜபக்ச தலைமையில் ஒரு குழுவை ஸ்தாபித்து. இந்தக் குழு ஒரு தீர்மானத்துக்கு வந்துள்ளது.

ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைக் குழுவின் தலைவர் என்ற வகையில் சமல் ராஜபக்ச தனியான தீர்மானத்தை அறிவிக்க தார்மீக உரிமை இல்லை. இந்த நிகழ்ச்சி நிரலிலுள்ள தீர்மானத்தை மீளப் பெற்று வேறு கலந்துரையாடல்களில் ஈடுபடவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஏ-இ)

# இலங்கையில் மதவெறியை விதைக்கின்றது பா.ஜ.க.!

### தொல். திருமாவளவன் குற்றச்சாட்டு



**சென்னை, டிசெ.3**

**இலங்கையில் மதவெறி உணர்வை தீவிரமாக பாரதிய ஜனதாக் கட்சி விதைக்கிறது என தமிழகத்தின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் குற்றஞ்சுமத்தியுள்ளார்.**

அவர் தெரிவித்துள்ளதாவது-

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கையை சிங்கள இனவெறி அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. அதை ஐ.நா. பேரவை உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளும், உலக நாடுகளும் வேடிக்கை பார்ப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

இந்துக்களுக்காக தொண்டாற்றுகிறோம் எனச் சொல்லும் பா.ஜ.க. உள்ளிட்ட இந்து அமைப்புகள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அடியெடுத்து வைத்து. இன உணர்வை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் மத உணர்வை பரப்பி வருகின்றன.

இந்துக் கோயில்கள் இடிக்கப்படுவதை பா.ஜ.க. பொருட்படுத்தாமல், தமிழ்த் தேசிய இன உணர்வை மங்கச்செய்து, மதவெறி உணர்வை விதைத்து வருவது வேதனை அளிக்கிறது - என்றார். (ஏ-இ)

## யானை–மொட்டு 'டீல்' வென்றார் கோத்தா!

கொழும்பு, டிசெ.3

யானை - மொட்டு டீல் காரணமாகவே 2019 ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய ராஜபக்ச வெற்றிபெற்றார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தற்போதைய அரசே 2020 இல் சர்வதேச நாணயநிதியத்துக்குச் செல்லவேண்டாம் என்று கூறியது. தனது சகாக்களுக்கு 600-700 பில்லியன் ரூபா வரிச்சலுகைகளை வழங்கியது. இதனால் அரச வருமானம் குறைவடைந்தது. அவ்வாறான செயற்பாடுகள் காரணமாகவே நாடு வங்குரோத்தானது. 2019 ஜனாதிபதித் தேர்தலிலும் அதற்கு முன்னரும் இடம்பெற்ற யானை - மொட்டு டீலினால் கோத்தாபய ராஜபக்சவை வெற்றிபெறச் செய்து நாட்டையே வங்குரோத்தாக்கினர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-44)

## வான்கதவு திறப்பு



வவுனியா, டிசெ.3

வவுனியா மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கனமழை காரணமாக பாவற்குளத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

மக்கள் நெளுக்குளம் - செட்டிகுளம் வீதியைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும் என்று மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது. (ச-75)

## வற் விலக்கு கோரும் 'கோப்'

கொழும்பு, டிசெ.3

மருத்துவ உபகரணங்கள், அம்புலன்ஸ்கள், விவசாய உற்பத்திகள் மற்றும் சிறுவர்களுக்கான போஷாக்கு உணவு போன்றவற்றுக்கு வற்விலக்கு அளிக்குமாறு கோப்குழு நிதியமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நிதியமைச்சில் கோப் குழுவுக்கும் நிதியமைச்சு அதிகாரிகளுக்குமிடையே இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-6)

## தேர்தல் உறுதி

கொழும்பு, டிசெ.3

2024 செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் எம்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஜூலை மாதம் தேர்தல் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் 2025ஆம் ஆண்டே நடத்தப்பட வேண்டும். ஜனாதிபதி விரும்பினால் நாடாளுமன்றத்தை கலைத்து விட்டு முன் கூட்டியே தேர்தலை நடத்தலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஏ-6)

## பாறியது மரம்!

கிளிநொச்சி, டிசெ.3

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட சுண்டுக்குளம் பகுதியில் கடும் மழையால் 50 வருடங்கள் பழமையான மரமொன்று பாறி வேருடன் சாய்ந்துள்ளது.

இதனால் அருகிலிருந்த கடை பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதுடன் மின்சாரமும் சிலமணிநேரம் தடைப்பட்டிருந்தது. கிளிநொச்சி மரக்கூட்டுத்தாபனத்தினர் மரத்தை வெட்டி அகற்றினர். (ச-113)

## விளையாட்டுத்துறை குறைகேள் அதிகாரி!



கொழும்பு, டிசெ.3

விளையாட்டுத்துறை தொடர்பான முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு விளையாட்டுத்துறைக்கு குறைகேள் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவார் என்று புதிய விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத்துறையை அபிவிருத்திப்பாதையில் கொண்டு செல்வதே தனது நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-6)

## மின்னேற்றும் நிலையங்கள் அமைக்கப்படுவது அவசியம்

கொழும்பு, டிசெ.3

மின்சார வாகனங்களுக்கு மின்னேற்றுவதற்குப் பரவலாக மின்னேற்றும் நிலையங்கள் அமைக்கப்படவேண்டுமென ருகுணு பல்கலைக்கழக மின்பொறியியல் சிரேஷ்ட விரிவுரையாளரான கொனரா தெரிவித்துள்ளார். நாங்கள் மின்சார வாகனங்களைப் பாவிக்க விரும்பினால் விரைவாக மின்னேற்றக்கூடிய மின்னேற்றும் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஏ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிசில் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், டிச.3

கருவி மாற்றுத்திறனாளிகள் சமூகவள நிலையத்தால் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் பொதுமக்கள் மற்றும் மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு கருவி மாற்றுத்திறனாளிகள் சமூகவள நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப 10மணிக்கு நடைபெறவுள்ளது. (எ-ரி)



## துப்பாக்கி ரவை மீட்பு

கிளிநொச்சி, டிசெ. 3

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உமையாள்புரத்தில் கைவிடப்பட்ட பற்றைப்பகுதிக்குள்ளிருந்து ஒரு தொகை துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் அவை மீட்கப்பட்டன.

அவற்றை கிளிநொச்சி நீதிமன்றின் அனுமதியுடன் சிறப்பு அதிரடிப்படையினரால் செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (ச-113)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் இழுபறியாகும். தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவ னம் செலுத்தவும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. நண்பர்களிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சங்க டங்கள் ஏற்பட்டு நீங்கும். நினைத்த காரியங்கள் வெற்றிகரமாக நிறைவேறும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கவனமாக இருக்கவும். எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். மனதில் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**கடகம்:** சுறுசுறுப்பான நாள். உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயல்படுவீர்கள். நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பீர்கள். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

**சிம்மம்:** காரியங்களில் பொறுமை மிக அவசியம். அவசர முடிவுகளைத் தவிர்ப்பது நல்லது. அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு கரையும். சிலருக்குக் கடன் வாங்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** பலவகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது. உறவினர்களால் ஆதாயம் கிடைக்கும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள்.

**துலாம்:** காரியங்கள் அனுகூலமாகும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கணவன் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் விற்பனை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** பதற்றம் இல்லாமல் செயற்படவேண்டிய நாள். தந்தையுடன் வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. அவருடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். அவ்வப்போது சற்று சோர்வு உண்டாகும். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டு இருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் மூலம் ஆதாயம் உண் டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முயற்சிகள் சாதகமாகும். கடனாகக் கொடுத்த பணம் திரும்பக் கிடைக்கும்.

**மீனம்:** சிலருக்கு தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். புதிய முயற்சிகளில் யோசித்து ஈடுபடுவது நல்லது.



## பெண் கைது

கிளிநொச்சி, டிசெ. 3

கிளிநொச்சி விநாயகபுரம் பகுதியில் உடைமையில் ஹெரோய்ன் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த பெண்ணை சோதனைக்குட்படுத்திய போது அவரிடமிருந்து 10 கிராம் 110 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது.

சந்தேகநபரை கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று சனிக்கிழமை முற்படுத்தியபோது அவரை 14 நாள்கள் தடுப்புக் காவலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்தனர். (ச-113)



## தென்னை மரம் வீழ்ந்து வீடு சேதம்

கிளிநொச்சி, டிசெ. 3

கடும் மழையால் கண்டாவளை பெரிய குளம் கட்டைக்காட்டுப் பகுதியிலுள்ள வீடொன்றின் மீது தென்னைமரமொன்று நேற்று அதிகாலை வேளை சரிந்து வீழ்ந்துள்ளது. இந்த அசம்பாவிதத்தால் வீட்டில் படுத்துறங்கியவர்களில் ஒருவர் சிறு காயங்களுக்குள்ளானார் என்றும் வீட்டின் கூரையும் பெருமளவில் சேதத்துக்குள்ளாகியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கிராம அலுவலருக்கு அறிவித்து மரத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-113)

## சந்நிதி ஆச்சிரமத்தால் செயற்றிட்ட உதவிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 3

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் மொத்தமாக 7இலட்சத்து 95 ஆயிரம் ரூபா பெறுமதியான செயற்றிட்ட உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. பொருளாதாரம் நலிவுற்ற பத்து மாணவர்களுக்கு 4 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. யாழ்.அளவெட்டி அருணாசலம் வித்தியாலய மாணவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட 120 குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன. (ச-66)

## விழிப்புணர்வு

பெண்களுக்கு எதிரானவன்முறை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு யாழ்.சமூகச் செயற்பாட்டு மையத்தால் யாழ்.மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரனிடம் விழிப்புணர்வுச் சுவரொட்டி கையளிக்கும் நிகழ்வு மாவட்டச்செயலர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. (ரி-66)

* * * *

யாழ்ப்பாணம், டிசெ. 3

மானிப்பாய் மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களுக்கானதுஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்தல், முறைப்பாட்டுப் பொறிமுறை, தொடுகை முறை மற்றும் ஒழுக்கம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு கல்லூரி மண்டபத்தில்கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சிறுவர், பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள், மானிப்பாய் சிறுவர், பெண்கள் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ரி-66)

### பல்கலை...

தின் கிளிநொச்சி வளாகத்தில், வரலாற்றில் முதன்முறையாக, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்களை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுப்பதற்காக அதில் பங்கேற்றவர்களின் ஒளிப்படங்களையும் இத்துடன் அனுப்பி வைத்துள்ளோம்.

இது விவசாய பீடத்தின் பீடாதிபதி வசந்தரூபா மற்றும் மூன்று பீடங்களின் பங்கேற்புடன் வளாகத்தின் அந்தந்த நிர்வாகத்தின் அனுமதியுடன் விவசாய பீட கேட்போர் கூடத்துக்கு முன்பாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

பீடாதிபதிகள் சாதாரண நிகழ்வுக்கு அனுமதி மறுக்கின்றனர். ஆனால், இலங்கையின் சட்டத்தை மீறிய பயங்கரவாத அமைப்பின் நிகழ்வுக்கு அவர்கள் அனுமதி வழங்கியுள்ளனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான பீடத்தில், பயங்கரவாதத்தை இளம் சந்ததியிடையே ஊக்குவிக்கும் வகையில், அங்குள்ள நிர்வாகத்தின் முதுகெலும்பு அற்ற செயற்திறன் காரணமாக மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்படுகின்றது. கிளிநொச்சி வளாகத்தில் இதனை அனுமதிப்பதானது எதிர்காலத்தில் பல்கலைக்கழக சமூகத்துக்குள்ளும் மாணவர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும். கிளிநொச்சி வளாகமும் பீடமும் இது வரை இனவெறி இல்லாத அமைதியின் அடையாளமாக இருந்து வருகின்றது.

இந்த நிலையில் மாவீரர்நாளைக் கடைப்பிடித்த மாணவர்களுக்கு எதிராக சிறிலங்கா பொலிஸ் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். பீடாதிபதிகள் இதற்குப் பொறுப்பு என்ற அடிப்படையில் அவர்கள் பதவி விலக்கப்பட வேண்டும் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பலஸ்தீனத்துக்கு ஆதரவாகக் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் நாவலப்பிட்டி சொய்சா கலே வீதியில் அமைந்துள்ள ஜும்மா பள்ளிவாசலுக்கு முன்பாக நடைபெற்றது. (எ-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 07 . 1936



மறைவு 02 . 12 . 2023

### முருகேசு சுப்பிரமணியம் (கராஜ்-வைரமுத்து)

(அம்பிகை மோட்டோர் வேர்க்ஸ் உரிமையாளர்)

நவிண்டில் சக்கலாவத்தை கரணவாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிரி கோட்டைத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (02.12.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், கதிர்காமு தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், மற்றும் காலஞ்சென்றவரான பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், பாலாம்பிகை, யசோதாம்பிகை (ஜேர்மனி), சுபாம்பிகை, யோகாம்பிகை (டென்மார்க்), சிவராமன் (ஜேர்மனி), செந்தில்வேல் (அவுஸ்ரேலியா), ஜனாதனா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (கந்தவனம்), கந்தையா (சதாசிவம்), செல்லம்மா, திருநாவுக்கரசு (கதிரவேல்) ஆகியோரின் இளைய சகோதரரும், தங்கம்மா, வள்ளிப்பிள்ளை, பொன்னையா, அன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயபாலு (உரிமையாளர், ஜெயா ரெக்ஸ் நெல்லியடி), கீர்த்தன் (ஜேர்மனி), சண்முகலிங்கம் (டென்மார்க்), மணிமேகலை (ஜேர்மனி), சசிந்தினி (அவுஸ்ரேலியா), தணிகைவேள் (ஆசிரியர் யா/நெல்லியடி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், பாரத் அஞ்சனா, உமைசுதன் பர்ஷா, கிருஷாயினி (அமரர்), டல்ஷிகா, நிகாஷன், சாரங்கா, ஜோதிகா, தேனுகா, அருண், லக்சனா, பிரவின், டீபிகா, சமுத்திரா, துர்க்கா, பைரவி, தேஷ்னா ரோஹித் ஆகியோரின் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (04.12.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 1240 087, 077 988 2160 தகவல்:குடும்பத்தினர்.



## விற்பனைக்கு

பாவித்த நல்ல நிலையிலுள்ள வீட்டுத் தளபாடங்கள் (மேசை, மரக்கதிரைகள், ஒற்றைக்கட்டில், Spring கட்டில், சோபாகதிரை, Dressing Table, Easy Chair, லுமாலா பெண்களுக்குரிய சைக்கிள் புல் வெட்டும் மிசின், Hot Water Heater விற்பனைக்குண்டு.

076 830 7424



## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

பிரிவு-50

- ★ Diploma in English / Spoken English
- ★ Diploma in ICT
- ★ Diploma in AI (Batch II)
- ★ Diploma in Psychology & Counselling
- ★ Diploma in Political Science
- ★ Diploma in Media Studies
- ★ Diploma in Caregiver
- ★ Diploma in Nursing
- ★ Diploma in Business Management

ஆரம்பம்:
09-12-2023 - 10.00 A.M
காலம்: 03 மாதங்கள்
சான்றிதழ் பிரிவுகள்

IPS Thirunelvely, Jaffna.
to your future
T.P: 076 685 2529






# ரொஷான் - ஷம்மி இரகசிய சந்திப்பு!

ரொஷான் ரணசிங்க விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்தபோது கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி டி சில்வாவை இரகசியமாக சந்தித்தார் என்று விளையாட்டுத்துறை அமைச்சின் முன்னாள் ஆலோசகர் சுதத் சந்திரசேகர தெரிவித்துள்ளார். ரொஷான் ரணசிங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க மிகவும் இரகசியமாக இரவு நேரத்தில் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது என்றும் அவர் கூறியுள்ளார். (எ-இ)

# பணவீக்கத்தால் விலை அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.3
தற்போது ஏற்பட்டுள்ள பணவீக்கமே வரி அதிகரிப்பு மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்புக்கு பிரதான காரணம் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பிரியங்க துனுசிங்க தெரிவித்துள்ளார்.
தற்போதைய பணவீக்க வீதம் எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்கலாம் எனவும், ஆனால் இது கடுமையான பணவீக்க சூழ்நிலையாக இருக்காது என்றும் அவர் கூறியுள்ளார். (எ-இ)


## Vacancy in Tellippalai Filling Station

### Gives Working opportunity to

- ✲ Part time job hunter
- ✲ waiting for University Entrance Student
- ✲ Out district University Student

this working opportunity support to your pocket money.

▶ Conditions

- ✲ 6 hours working time
- ✲ 5 days work

▶ Expectation

- ✲ Polite behave
- ✲ Good customer service
- ✲ Other Conditions are apply



If intrest please visit and discuss
Vennu:- Tellippalai Filling Station
Time :- 3rd Dec. 2023
Sunday 09.00 - 13.00



## மரண அறிவித்தல்

மண்ணில் 23 . 10 . 1956



விண்ணில் 02. . 12 . 2023

### நல்லையா இரகுநாதன் (ரகு)

(நீபன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - தாவடி)

நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும் தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா இரகுநாதன் (நீபன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் - தாவடி) நேற்று (02.12.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா பிள்ளையம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், கமலேஸ்வரி (கமலம்) அவர்களின் அன்புக் கணவரும், ஆகீஷன் (மாணவன் - மானிப்பாய் சத்திய சாயி பாடசாலை) அவர்களின் அன்புத் தந்தையும், அமிர்தலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர் - அளவெட்டி சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாசாலை), சற்குணநாதன் (சுவிஸ்லாந்து), ஜெகநாதன் (ஓய்வு பெற்ற ஊழியர் சித்த மருத்துவம், யாழ். மாநகர சபை), சிவநாதன் (ஜேர்மனி), ஜெயந்தி (ஆசிரியர், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), அருள்நாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அமரர் பரமேஸ்வரி, சண்முகராஜா, அருந்ததி (மலர்), நேசகுமார் (சோதி-ஓய்வுபெற்ற மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2023) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு தாவடியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உழவர் வீதி,
தாவடி வடக்கு, தாவடி.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P:076 287 9274

(CS 26971)A-1


# சூரிய உதயத்தால் 3,000 டொலர்

கொழும்பு, டிசெ.3
சிகிரியாவிலிருந்து சூரிய உதயத்தின் அழகை வெளிநாட்டவர்கள் காணும்வாய்ப்பை வழங்குவதன் ஊடாக நாளாந்தம் சுமார் 3 ஆயிரம் அமெரிக்க டொலர் ஈட்டப்படுகிறது [illegible]ன மத்திய கலா[illegible]ர நிதியத்தில் [illegible]ணிப்பாளர் நாய[illegible]ம் பேராசிரியர் காமினி ரணசிங்க தெரிவித்துள்ளார்.
இரண்டு [illegible]டங்களுக்கு [illegible]ன்னர் கடன் சு[illegible]மையில் இருந்த மத்திய கலாசார நிதியத்தின் டொலர் ஈட்டும் பெறுமதி, தற்பொழுது 614 சதவீதமாக அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் தற்போது வெளியாகியுள்ள நிலையில், பாடசாலைகளால் அனுப்பப்பட்ட பெறுபேறுகளின் விவரம்

**அளவெட்டி அருணோதயாக் கல்லூரி**

இ.டசோதன்-9ஏ, ம.மதுரிகன் -9ஏ, ச.கஜானனன் 9ஏ, உ.சகானா - 9ஏ, வி.தர்சனா-9ஏ, கி.சர்மதா 9ஏ, த.பஸ்லின் -8ஏ,பி, ஜோ.டிசாந்- 8ஏ,பி, கி.வினுஜன்-8ஏ,பி, ப.புஜதருணி -8ஏபி, சி.பிரவினா -8ஏசி, ஆ.அனஸ்ரியா -7ஏ2பி, ய.திலக்சன் -7ஏபிசி, ஒ.கிசான் -7ஏபிசி, சு.தேனுசா-7ஏபிசி, ஆ.அனுதர்சி -7ஏபிசி, ரா.திலக்சனா - 7ஏ2சி, அ.நஸ்வினன் - 6ஏ3பி, பா.தேனுகா - 5ஏ4பி, செ.நிதுசிகா - 5ஏ4பி, லோ.ஜிசானுகா -5ஏ2பி2சி.

**சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

ரம்மியா-8ஏபி, அ. டக்சனன்-8ஏசி, கு. ஜனயன்-7ஏபிசி, த. நீதுர்சன் -7ஏபிசி, வி. பிரபஜன்-7ஏ2சி, ச.டினோஜ் -7ஏசிஎஸ், கி.கோகிலா-7ஏசிஎஸ், சி. அபிநயா - 6ஏ3பி, க.சரண்யா - 6ஏ2பிசி

**பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.**

எஸ்.சரண்ராஜ் - 9ஏ, கே. புவிதாஸ் - 9ஏ, ரி.சரணியா - 9 ஏ, இ.திவியா -9ஏ, எஸ்.வேணுஜா - 8ஏ,பி, கே. சாதனா - 8ஏ,பி, எஸ். தமிழினி - 8ஏ,பி, ஆர்.கிருத்திகா - 7ஏ,2பி.

**யா/ மந்துவில் றோ.க.த.க.பாடசாலை**

செ.நிதுசா-9ஏ, ப.பானுசா-5ஏ,2பி,சி,எஸ், க.கரிகரன்-4ஏ 2பி 2சி,எஸ், சி.சீராளன்-2ஏ 5சி 2எஸ், பு.துவாரகன் - 2ஏ பி 3சி 3எஸ், து.டிக்சாந்- ஏ3பி 4சி எஸ், சே.பகீதன் - பி சி 7எஸ், இ.பிருந்தன் - 3சி, 2 எஸ், சி.தனுசா - பி 2சி எஸ்.

**யா/கைதடி குருசாமி வித்தியாலயம்**

தெ.பருஷ்ரனா- 8ஏ எஸ், இ.சதுர்ஸனா - 7ஏ 2பி, ம.திரிஷா -7ஏ பி சி, த.மதுஷா-5ஏ 2பி 2எஸ், ச. அபிநயா - 4ஏ 2பி சி 2எஸ், சி.நேருஜா-3ஏ 2பி 3சி எஸ்,பி.மதிவண்ணன் -3ஏ2பி 2சி எஸ், செ.யதுஷா-2ஏ 2பி 2சி எஸ், ந.துஷானா - ஏபி 4சி எஸ்,ப.கஜீபன்- ஏ4சி2எஸ்,சி.கம்சிகா-2பி 2சி 4எஸ், மோ.அபிஷன் - 3சி 4எஸ்.

**சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி**

க.கஜதாரணி - 9ஏ, த.தரணி - 8ஏபி, சி.சிவசங்கர் - 7ஏ2பி, சி.துஷாந்தி - 6ஏ3பி, து.கம்சனா-6ஏ2பிசி, அ.ஜதுசா - 6ஏபி2சி, தி.டயானி-5ஏ 3பிசி,க.றஜியா - 5ஏ 2பி 2சி, தி.அபிநயா - 5ஏ 2பி 2எஸ், பா.ஜன்சிதா - 5ஏபி2சிஎஸ், ஜெ.தமிழினி - 4ஏபிசி3எஸ், ஜெ.அனந்தனா - 3ஏ 6பி, சூ.ரகுராம் - 3ஏ 5பி சி, ம.அனுசன் - 3ஏ 3பி 2சி எஸ்,ஜெ.கஜரூபன் - 3ஏ2பி3சிஎஸ், ரா.வினோகா 3ஏ2பி 3சி எஸ்.

## திருமலை மாணவி ஆறாமிடம்

திருகோணமலை, டிசெ. 3
2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி திருகோணமலை ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவி தேசிய மட்டத்தில் 6 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார். இவர் 9 பாடங்களிலும் 9'ஏ'பெறுபேற்றைப் பெற்றுப் பெருமை சேர்த்துள்ளார். (ச-50)

## ஹாட்லிக் கல்லூரியில் 11 மாணவர்களுக்கு 9'ஏ'

யாழ்ப்பாணம், டிசெ.3
வெளியாகியுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஹாட்லிக் கல்லூரியில் 11 மாணவர்கள் 9'ஏ' சித்தியும் 23 மணவர்கள் 8'ஏ' சித்தியும் பெற்றுள்ளனர்.
ஹாட்லிக் கல்லூரியில் 151 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்த நிலையில் 99 சதவீதமான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.
தமிழ்மொழி மூலம் தோற்றியவர்களில் 11 மாணவர்கள் 9'ஏ' சித்தியையும், 18 மாணவர்கள் 8'ஏ' சித்தியையும் பெற்றுள்ளனர். ஆங்கில மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 5 மாணவர்கள் 8'ஏ'சித்திகளைப் பெற்றுள்ளனர். (ச-100)

## வவு. தமிழ் மத்தியில் 20 மாணவருக்கு 9'ஏ'

வவுனியா, டிசெ.3
வெளிவந்த க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை முடிவுகளின் படி வவுனியா தமிழ்மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் 20 பேர் 9'ஏ' சித்திகளைப் பெற்றுள்ளனர். 23 மாணவர்கள் 8'ஏ'சித்திகளையும் 20 மாணவர்கள் 7'ஏ' சித்திகளையும் பெற்றுப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளனர். (ச-110-75)



## இனிய வாழ்வு இல்ல மாணவர் சாதனை

முல்லைத்தீவு, டிசெ. 3
முல்லைத்தீவு வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்ல 3 மாணவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.
இல்ல மாணவர்களான கே.நாகையரசி, கே.தனுஷ் ஆர்.துருத்திகா ஆகியோரே சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர் (ச-75)

## வங்காலை சென்.ஆன்ஸ் கல்லூரி சாதனை

வெளியாகியுள்ள சாதாரண தரப் பரீட்சையில் மன்.வங்காலை சென்.ஆன்ஸ் கல்லூரியில் 4 மாணவர்கள் '9ஏ' பெற்றுள்ளதுடன் 3 மாணவர்கள் 08ஏ பெற்றுள்ளனர். (ரி-60)

## புதுக்குடியிருப்பு ம. கல்லூரியில் 13 பேருக்கு 9'ஏ'

முல்லைத்தீவு, டிசெ. 3
க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவர்களில் 13 மாணவர்கள் 9'ஏ'சித்திகளையும், 5 மாணவர்கள் 8ஏபி சித்திகளையும், 5 மாணவர்கள் 7'ஏ' சித்திகளையும் பெற்றுள்ளனர். (ரி-75)

## இறம்பைக்குளம் மகளிர் ம.வி. சாதனை!

வவுனியா, டிசெ. 3
க.பொ.த. சா/தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியால மாணவர்களில் 25 மாணவர்கள் 9'ஏ' சித்தியையும் 25 மாணவர்கள் 8'ஏ' சித்தியையும் பெற்றுள்ளனர். (ரி-75)

## துர்க்காதேவி இல்ல 13 மாணவிகள் சித்தி

யாழ்ப்பாணம், டிசெ. 3
தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான இல்லத்தில் கல்வி கற்ற 13 மாணவிகள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்திய டைந்துள்ளனர்.
இல்ல மாணவிகளான ஜெ. தமிழ்செல்வி - 8ஏ எஸ், பி.கலைவாணி -5ஏ சி, எ. யுலிட்ராஜி -6ஏ பி 2சி, என். அவிசாயினி - 4ஏ பி 3சி எஸ், யு.தேவிகா -3ஏ 4பி 2எஸ், வை. அனித்தா - ஏ3 பி3 சி எஸ், எம். திவ்யா - 3ஏ பி 3சி 2எஸ், ஜெ.பவித்திரா - 2ஏ 2பி 3சிஎஸ், எஸ். விதுஜா -3ஏ 2எஸ் 3சி, எஸ்.அஸ்வினி - ஏ பி5 சி எஸ், எல்.பிரவீனா பி 2சி 2எஸ், எஸ் .சந்தியா -2சி 4எஸ், ய.அருவிநிலா -3பி 4சி எஸ் பெறுபேறுகளைப் பெற்றுச் சித்தியெய்தியுள்ளனர். (ச-9,66)

## மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி முன்னிலை

மன்னார், டிசெ. 3
க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தில் 35 மாணவர்கள் 9'ஏ' சித்தியையும், மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மாணவிகள் 13 பேர் 9'ஏ' சித்தியையும் பெற்றுள்ளனர்.
புனித சவேரியார் ஆண்கள் தேசியப் பாடசாலை 4 மாணவர்களும், சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி 4 மாணவர்களும், வங்காலை சென். ஆனாள் கல்லூரி 4 மாணவர்களும், முருங்கன் மத்திய கல்லூரி 3 மாணவர்களும் , நானாட்டான் டிலாசால் கல்லூரி 2 மாணவர்களும், அரிப்பு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை ,எருக்கலம்பிட்டி மகளிர் பாடசாலை, பேசாலை சென்.பற்றிமா மகா வித்தியாலயம், மாவிலங்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் நானாட்டான் சிவராஜா இந்து பாடசாலை ஆகியவற்றில் ஒரு மாணவர் 9'ஏ' சித்தியையும் பெற்றனர். (ரி-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


# பருவநிலைக்கு ஒரு நீதிமன்றம்!

புவியின் வெப்பநிலையைக் குறைத்து நேர்மறையான காலநிலை மாற்றத்தை உருவாக்குவதற்காகவும், அதற்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களைத் தயாரிப்பதற்காகவும் 'காலநிலைக்கான நீதிமன்றம்' ஒன்றை இலங்கையின் தலைமையில் உருவாக்குவதற்கான நடவடிக்கைகளில் தீவிரம் காட்டியிருக்கின்றது கொழும்பு. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 78ஆவது அமர்வு கடந்த செப்ரெம்பரில் இடம்பெற்றது. காலநிலை மாற்றம் தொடர்பில் அந்த அமர்வில் விரிவானதும் தீவிரமானதுமான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்த அமர்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில், வல்லரசு நாடுகள் காலநிலை மாற்றம் தொடர்பில் சர்வதேச விதிமுறைகளைமீறுகின்றமையை வெளிப்படையாகவே கண்டித்திருந்தார். இது விடயத்தில் ஓர் உச்சப் பாய்ச்சலாகத்தான் இந்தக் 'காலநிலை நீதிமன்றம்' தொடர்பான முன்னெடுப்புகளைக் கொள்ளவேண்டியுள்ளது.

உலகளாவிய போர்ப்பதற்றம், காலநிலை தொடர்பில் வல்லரசுகள் கொண்டிருக்கும் அசமந்தப் போக்கு மற்றும் பொருளாதாரச் சமநிலையற்ற வளப்பகிர்வு என்பன தீவு நாடுகளின் ஆயுளையும், வறியநாடுகளின் பொருளாதாரக் கட்டமைப்பையும் 'முற்றாகத் தீர்மானித்துக்கொண்டிருக்கும்' நிலையில், இலங்கையின் இந்த நடவடிக்கை பல நாடுகளால், அதிலும் குறிப்பாக துவாலு, மாலைதீவு போன்றதீவுநாடுகளால் மெச்சப்படுகின்றது - பாராட்டப்படுகின்றது. தீவு நாடுகளின் இருப்பை உறுதிசெய்வதற்கான கோரிக்கையை மன்றாட்டமாக முன்வைத்துக் கொண்டிருக்காமல், உலக வல்லரசுகளுக்கு எதிராக நின்று அவற்றை நோக்கி நேர்பட விரல்நீட்டியிருக்கும் 'கெத்துக்காக' ஜனாதிபதி ரணிலை எத்தனை பாராட்டினாலும் அது தகும். அதேநேரம் ரணிலின் அரசியல் முதிர்ச்சி - சர்வதேசப் பிணைப்பு - அவருக்கு இருக்கக் கூடிய சர்வதேச அங்கீகாரம் போன்ற அம்சங்களையும் இந்த நகர்வுகள் கட்டியம் செய்கின்றன என்பதையும் ஏற்கத்தான் வேண்டும். ஜனாதிபதி ரணிலின் காலநிலை ஆலோசகராக நோர்வேயின் முன்னாள் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றமையும் இங்கே கோடு காட்ட வேண்டிய விடயமாக அமைகின்றது.

ஆனால், ஒரு தீவு நாடாக அழிவின் ஆபத்தம்சங்களை எதிர்கொண்டிருக்கும் தீவுத் தேசங்களின் பிரதிநிதியாக - இலங்கையின் தார்மீக கோபத்தை, எவ்வளவுதூரம் சர்வதேசம் கண்டுகொள்ளப்போகின்றது என்ற கேள்வியும் இங்கே எழுவது தவிர்க்கமுடியாததாகின்றது. ஏனெனில் அதிவேகத்தில் மாறிவரும் பருவநிலை மாற்றத்துக்கு எதிராகப் பணபலம் கொண்ட வல்லாதிக்கநாடுகள் இதுவரை காத்திரமான நடவடிக்கைகளுக்கான ஆரம்பப்புள்ளியைக்கூட கண்டடையவில்லை என்பதே உண்மை. கார்பன் வெளியேற்றத்தாலும், பூமியை அதன் இயல்பு நிலையில் இருந்து கொஞ்சம்கொஞ்சமாக மாற்றுவிக்கும் சமூக விரோதச் செயற்பாடுகளாலும் மனிதகுலம் தன் இருப்பையே தொலைத்து வருகின்றது. இலங்கையின் குரலுக்கோ அல்லது இதர தீவு நாடுகளின் குரலுக்கோ கார்பனை அளவுகடந்து வெளியேற்றும் வல்லரசுகள் செவிசாய்க்கும் என்ற நம்பிக்கை தீவுத் தேசங்களிடம் கொஞ்சமும் இல்லை. அந்தக் குணாம்சம் வல்லரசுகளிடம் இருந்திருந்தால் பூமியின் வெப்ப நிலையை 2 செல்சியஸால் குறைப்பது என்று 130 உலகத் தலைவர்களுடன் பரிஸில் எட்டப்பட்ட சர்வதேச உடன்பாடு நீர்த்துப்போகச் செய்யப்பட்டிருக்காது.

போர்க்குற்றத்துக்கு எதிரக சர்வதேசப் பொறிமுறைகள் இறுக்கமாகப் பின்பற்றப்படுவதுபோல், பருவநிலைப் படுகொலைகளுக்கு எதிராகவும் நீதி இறுக்கப்பட வேண்டும். இதற்காக உருவாக்கப்படும் பிரத்தியேக நீதிமன்றங்களிடம் கொடுக்கப்படும் அதிகாரம்தான் தீவு நாடுகள் தங்களின் இருப்பை உறுதிப்படுத்த ஒரே வழி. இல்லையேல், அந்தாட்டிக்கா பனிப்பாறைகள் உடைவதும், அதனால் ஏற்படும் நீருயர்வால் துவாலு உள்ளிட்ட தேசங்கள் தண்ணீரில் மூழ்குவதும் தவிர்க்கப்படமுடியாததே. இன்னும் சொல்லப்போனால் எம் கண்முன்னே அவை நிகழும்.




## பயங்கரவாதத் தடைச் சட்டம் அமெரிக்கா, ஐ.நா. அதிருப்தி!

**கொழும்பு, டிசெ.3**

**இலங்கையின் வடக்கு - கிழக்கில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி அண்மையில் நடந்த கைதுகள் தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று ஐக்கியநாடுகள் மனித உரிமை அலுவலகம், அமெரிக்கா ஆகியன தெரிவித்துள்ளன.**



இது மனித உரிமைகளை மீறும் சட்டத்தைப் பயன்படுத்துவதை நிறுத்திவைப்பது தொடர்பான அரசாங்கத்தின் வாக்குறுதிகளுக்கு மாறானது எனவும்ஐ.நா. தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவது கவலையளிக்கின்றது என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். (எ-இ)

## பஸ் கட்டணம் உயராது

கொழும்பு, டிசெ.3

டீசல் எரிபொருள் 27 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளபோதிலும் பேருந்துக் கட்டணங்கள் குறைக்கப்படமாட்டாது என்று தனியார்பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார். (ச-இ)

## சிறுவர் பாதுகாப்புக்காக சமூக புலனாய்வுப் பிரிவு

கொழும்பு, டிசெ.3

சிறுவர்களின் திறமைகள் மற்றும் திறன்களைப் பயன்படுத்தி அவர்களின் சொந்தப் பாதுகாப்பையும் சமூகப்பாதுகாப்பையும் உறுதிசெய்யும் வகையில் சமூகப் புலனாய்வுப் பிரிவொன்று உருவாக்கப்படும். சமூகப் புலனாய்வுப் பிரிவுப் பணியை விரிவுபடுத்துவதற்காக ஆயிரம் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களை நியமிக்க கல்வி அமைச்சின் ஒப்புதலைப் பெற்றுள்ளோம் என்று பாதுகாப்பு அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார். (எ-இ)

## விசேட பண்டவரி

கொழும்பு, டிசெ.3

யோக்கற், வெண்ணெய், பேரீச்சம்பழம், தோடம்பழம், அப்பிள், பெரிய வெங்காயம், மீன்ரின், நெத்தலி போன்ற பொருள்களுக்கு விசேட பண்ட வரி அடுத்த ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரை அறவிடப்படவுள்ளது. (எ-இ)



## டெங்கு 76,000

கொழும்பு, டிசெ.3

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், பதிவான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 76 ஆயிரத்தைக் கடந்துள்ளது என்று தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதில் கொழும்பு மாவட்டத்திலேயே டெங்குத் தொற்றால் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

## மருந்து மோசடி இனி இருக்காது!

வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகள்மூலம் மருந்து இறக்குமதியில் இடம்பெறும் ஊழல், முறைகேடுகள் மற்றும் ஏனைய சர்ச்சைக்குரிய விடயங்களைத் தடுக்கமுடியும் என்று சுகாதார இராஜாங்க அமைச்சர் விசேட மருத்துவர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

"நாட்டில் உள்ள மருந்துகளின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், நாட்டில் மருந்துகளை உற்பத்தி செய்தல், அவற்றைச் சந்தைக்கு அறிமுகப்படுத்தும் பணியை மேலும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

## நாளை

**04.12.2023**

**திங்கட்கிழமை**

**கார்த்திகை 18**

**ஆறுமுக நாவலர் குருபூசை**

சுபநேரம் : 12.15 - 01.45

ராகுகாலம் : 07.45 - 09.15

## நாளொரு நல்வார்த்தை

உங்களால் பெரிய விஷயங்களைச் செய்யமுடியவில்லை என்றால், சிறிய விஷயங்களைச் சிறந்த வழியில் செய்து பாருங்கள்.

- அன்ட்ரூ கார்னெகி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 20 - 08 - 1955

இறப்பு 03 - 12 - 2017

## அமரர் வல்லி மகேந்திரன்

(சமாதான நீதவான் - JP)

அன்புள்ள அப்பா........
எங்கள் அப்பாவுக்கு வணக்கம்!
துன்னையூரில் வாழ்ந்து கொண்டு
துயர் துடைக்கும் கந்தனவன் காலடியில் சரணடைந்த
கண்ணியமானவர் எம் அப்பா!

என் அப்பாவை எழுதுவதற்கு
ஏடு எடுத்தாலும் காணாது
எழுதவும் முடியாது
எழுதியும் பயனில்லை
என்னதான் செய்வது?

பொய்யாக வாழ்விங்கே
பொழுதெல்லாம் தெரிகின்றது
மெய்யாக்க வருவாயோ
மேனி துடிக்குதிங்கே...

ஆயிரம் தான் கதை சொன்னேன்
அழகழகாய் பொய் சொன்னேன்
பெற்றவனே உன் பெருமை
ஒற்றைவரி சொல்லனலவே...



உமை நினைத்து வாடும்...........
மனைவி - தேவமலர்.
பிள்ளைகள் - மதன், மதனா, மோகன்ராஜ், பிறேமன்.
மருமக்கள் - சிந்துஜா, தீபன், தனுசா, தனுசியா
பேரப்பிள்ளைகள் - திரிஷிகா, அப்ஷிகா, அனன்யா, சந்தோஷ், சஞ்சனா, ஹரிகணன், யஸ்மித்ரா, அஸ்வத், சஞ்சை, ஆரத்தியன், சஜித்.

துன்னாலை மேற்கு, கரவெட்டி. 077 707 8628

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 06 . 1950



மறைவு 30 . 11 . 2023

## நடராசா கனகரத்தினம்

**(உரிமையாளர், அசோக் தொழிற்சாலை-சுன்னாகம்)**

ஏழாலை கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கனகரத்தினம் (உரிமையாளர், அசோக் தொழிற்சாலை-சுன்னாகம்) கடந்த (30.11.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா விசாலாட்சி தம்பதியரின் சிரேஸ்ட புதல்வரும், நவநிதியின் அன்புக் கணவரும், டயாணி (லண்டன்), அசோக் (பஹறின்), துளசி (சுவிஸ்), கஜன் (பிராந்திய முகாமையாளர் Assetline) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மசீலன், மலர்விழி, சாந்தகுமார், ரேவதி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரவின், பிரீத்திகா, ஷாரிணி, மர்வின், கெவின், றித்திகா, யெஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவமலர் மற்றும் கணேசலிங்கம், சறோசனா, மல்லிகாதேவி, தனேஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுசீலாதேவி மற்றும் மதனதாசன், றமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மாவதி, காலஞ்சென்றவர்களான பரம்ஜோதிநாதன், நாகராசா மற்றும் கணேசலிங்கம், இந்திரபவானி, சுதாநிதி, சிவாஜினி, ஜெயகௌரி (லண்டன்) காலஞ்சென்ற ஜெயசீலன் மற்றும் தயாளகுமார், நவரஞ்சன் (கனடா), ஜெயநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.30 மணியளவில் தகனக்கிரியைக் காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
076 382 0617 (மகன்)

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27150) A-1

# வேலை வாய்ப்பு

- **Maldives**
  **Reservations Manager (5*Hotel)**
  **Salary 500,000**
- **மேசன்**
  200,000 க்கு மேல் சம்பாதிக்கலாம்
  தங்குமிடம், உணவு இலவசம்

மேலதிக தகவல்களுக்கு.

**BETTA Consultant**
**K.K.S. Road, Kondavil.**
**T.P NO: 075 221 1721**
**071 040 4773**

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
# வழங்குநர்களை பதிவு செய்தல் 2024

எமது சபையினால் 2024 ஆம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப் பட்டுள்ள பொருட்கள் சேவைகளை வழங்குவதற்குத் தம்மை பதிவு செய்ய விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொருட்கள்**

01. காகிதாதிகள் எழுது பொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள்)
03. சித்த மருத்துவ மருந்துகள்
04. நூலகங்களுக்கான நூல்கள்
05. துணி வகைகள்
06. கட்டடப் பொருட்கள் (சீமெந்து, ஓடுகள், கம்பி வகைகள்)
07. கற்கள், மணல்கள்
08. தீந்தை வகைகள் (Paints) நிறம் தீட்டும் பொருட்கள்
09. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருட்கள்
10. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள்
11. மின்வழங்கு பொருள்கள் மின் பாவனைப் பொருட்கள்
12. எரிபொருள்,உராய்வு நீக்கி
13. இரும்பு பொருட்கள்
14. தீராந்திகள், பலகைகள் ,சட்டங்கள்
15. பனைமரங்கள், சலாகைகள்
16. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
17. கணினி பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
18. சுத்திகரிப்பு பொருள்கள் .கிருமி நாசினிகள்
19. பாதணிகள், தோல் பொருட்கள் மழை அங்கிகள்
20. அலங்காரப் பொருட்கள்
21. இலத்திரனியல் பொருட்கள்

**சேவைகள்**

01. அச்சிடுதல், பதாதைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல்கள் கட்டுதல்
02. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்துதல்
03. வாகனங்களுக்கான ரியூப் ஒட்டுதல்,ரயர் மாற்றுதல்
04. ஒட்டு வேலைகள், உலோக வேலைகள்
05. கனரக.வாகனங்களின் சேவை,வாடகைக்கு விடல்
06. மின்சாதனங்களின் திருத்தம்,மீள மின் வலுவூட்டல்
07. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
08. வாகனங்கள் சுத்திகரிப்பு
09. கோலவுடை தைத்தல்
10. கணினி பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
11. இறப்பர் முத்திரை தயாரித்தல்
12. வீதி கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலை

விண்ணப்பமானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்ப படிவங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத் திற்கும் பதிவுக் கட்டணமாக ரூபா.1000.00(வரிகள் நீங்கலாக ) செலுத்தப்படல் வேண்டும்.

விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2024"** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் **செயலாளர், தலைமை அலுவலகம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்படிவங்கள் 31.01.2024 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளபடும் மேலதிக விபரங்களுக்கு 024-3243544 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**
03.12.2023.

(CR 41122) A-1

### நினைவேந்தலைக்...

முறையில் படுகொலை செய்திருந்ததுடன், 5 பேர் கடத்தப்பட்டுப் பின்னர் கொல்லப்பட்டனர்.

இதன் 39 ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் அவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் உணர்வுபூர்வமாக நேற்று இடம் பெற்றன.

இந்தநிலையில் ஒட்டுசுட்டான் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட குழுவினர்அங்கு வந்து, ஒலிபெருக்கி பாவிப்பதற்கான அனுமதிப்பத்திரம் பெறவில்லை என தெரிவித்து நிகழ்வில் புகுந்து குழப்பத்தை விளைவித்தனர்.

கடந்த காலங்களில் எந்தவொரு தொல்லையும் இல்லாமல் நினைவேந்தல் இடம் பெற்றது என்பதைச் சுட்டிக்காட்டி மக்கள் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இறுதியில் திட்டமிட்டதற்கு முன்னதாக நிகழ்வை முடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

(அ-ஒ-19)

### விபத்தில்...

துடன் மோதியதில் சம்பவ இடத்திலேயே இளைஞர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்த பயணித்த இளைஞர் காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.'பட்டா' வாகனத்தின் சாரதி காயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்

(அ-ஒ-23-27-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கனடாவிற்கு

## உங்கள் சுயதொழில் மூலம் இலகுவாக குடிபெயர்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு!!!

DOCTORS | HOSPITALITY | AGRICULTURE | CONSTRUCTION | HEALTH INFORMATICS | PROJECT MANAGEMENT | AUTOMOTIVE MECHANICS | INFORMATION TECHNOLOGY | NURSES | TEACHERS | ENGINEERS | MARKETING | BUSINESS ADMINISTRATION

### தகமைகள்

- தொழில்துறை சார்ந்த பாடநெறிகளில் Diploma / Degree
- குறைந்தபட்சம் 1 வருட முன் அனுபவம்
- 45 வயதிற்கு உட்பட்டவர்கள்
- 24 வார பயிற்சிக்கு பின் கனடாவில் 24 வார தொழில் பயிற்சி

### சலுகைகள்

- கணவன் அல்லது மனைவிக்கு தொழில் அனுமதியை பெற்றுக்கொள்ள முடியும்.
- பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி
- 06 வயதிற்கு உட்பட்ட ஒவ்வொரு குழந்தையும் வருடாந்தம் 6,997 கனேடிய டொலரும் 06 முதல் 17 வயதிற்கு இடைப்பட்ட பிள்ளைகள் வருடாந்தம் 5,903 கனேடிய டொலரும், கனேடிய குழந்தை நலத் திட்டத்தின் கீழ் பெற்றுக் கொள்ள முடியும்.
- 02% வருடாந்த வட்டிக்கு 95% வரை வீட்டுக் கடன்கள் பெற்றுக் கொடுக்கப்படுகிறது.
- பெற்றோர் மற்றும் குழந்தைகளுக்கான வலுவான மருத்துவ காப்புறுதி
- பயிற்சிக்குப் பின் குறைந்தபட்சம் ரூபா. 600,000ற்கும் மேற்பட்ட சம்பளத்தை பெற்றுக் கொள்ள முடியும்.



### சிறப்பம்சங்கள்:

- பயிற்சியின் பின் விரைவான தொழில் அனுமதி மற்றும் LMIA
- கனடாவில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு IELTS, ESL தேவையில்லை
- முழு குடும்பத்தினரும் விண்ணப்பிக்கலாம்
- விசா அனுமதிக்கு பின்னர் கட்டணம் செலுத்தக்கூடிய வாய்ப்பு
- 03 வருட சேவைக்கு பின்னர் PR வழங்கப்படும்
- விசா விண்ணப்பங்கள் மற்றும் தொழில் அனுமதி நடவடிக்கைகள் கனடாவில் உள்ள பின்வரும் சட்ட நிறுவனத்தால் கையாளப்படும் BDIA Bertrand Deslauriers

## உங்கள் பிள்ளைகளுடன் கனடாவிற்கு வாருங்கள்

### தகமைகள்

- பிள்ளைகளின் வயது 04 தொடக்கம் 17 வயதிற்கு உட்பட்டிருத்தல்
- பெற்றோர்களின் சிறந்த நிதி நிலமை
- பெற்றோர்களுக்கு இலங்கையுடன் வலுவான உறவு காணப்படல்
- கனேடிய விசா இதற்கு முன்பு நிராகரிக்கப்படாமை
- பெற்றோர்களுக்கு குற்றவியல் பதிவுகள் காணப்படாமையை தெளிவுபடுத்துதல்

### சிறப்பம்சங்கள்

- பெற்றோர்கள் இருவரும் பிள்ளைகளுடன் செல்லும்படி பள்ளியில் இருந்து அதிகாரப்பூர்வ அழைப்பு கிடைக்கப்பெறல்
- பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் விசா அனுமதிக்குப் பின் கல்விக் கட்டணத்தை செலுத்தக்கூடிய வாய்ப்பு
- பிள்ளைகள் மற்றும் பெற்றோருக்கு IELTS தேவையில்லை
- பெற்றோருக்கு வயதெல்லை மற்றும் கல்வித்தகுதி அவசியமில்லை
- பெற்றோருக்கு 10 வருட சுற்றுலா விசா

### வசதிகள்

- பெற்றோரின் விசாவை, தொழில் அனுமதிப்பத்திரமாக அனுமதிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- இதன் மூலம் பெற்றோருக்கு வேலை வாய்ப்பு + LMIA மற்றும் தொழில் அனுமதிக்கான உரிமை கிடைக்கப்பெறும்
- பெற்றோருக்கு திறந்த தொழில் அனுமதியை பெற உரிமை உண்டு
- பெற்றோருக்கு தொழில் அனுமதி கிடைத்த பின் பிள்ளைக்கு கல்வி இலவசம்
- தொழில் அனுமதிக்குப் பின் மூன்று ஆண்டுகளில் முழுக்குடும்பமும் நிரந்தர வதிவிடத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்
- பெற்றோரின் தொழில் அனுமதிக்குப் பின் பிள்ளைகளுக்கு வருடாந்த கொடுப்பனவுக்கான அனுமதி கிடைக்கப்பெறும்
- பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளுக்கு வலுவான காப்புறுதி திட்டங்களுக்கான அனுமதி கிடைக்கப்பெறல்

தமிழில் தொடர்புகொள்ள
Yalani
0740 270 054
Jeyakumari
0775 643 652

நிரந்தர வதிவிட விண்ணப்பங்களுக்கான உங்கள் விசா விண்ணப்பம் கனடாவில் உள்ள ஒரு முன்னணி சட்ட நிறுவனத்தினால் கையாளப்படுகிறது. கனடாவில் குடியேறுவது தொடர்பில் உங்களுக்கு ஏதேனும் பிரச்சனைகள் இருப்பின் எங்கள் முக்கிய வழக்கறிஞர்களை அனுகவும்.

ஆலோசனைகளுக்கு அழைக்கவும் - 0777 788 732 கிளமென்ட் பெரேரா

**Consolidated Academic Lanka (Private) Limited**
No.22-B, Station Lane, Nugegoda.
112 890 692 / 117 688 071 / 117 688 072 / 117 688 073
ceo@academiclanka.com / info@academiclanka.com
www.academiclanka.lk

ஆங்கிலம் / சிங்களம்
Kanchana - 0760 090 166
Pahanya - 0770 852 514
Kawshali - 0782 357 047
Ashika - 0743 341 806


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

British BUSINESS COLLEGE

# CONGRATULATIONS

BRITISH BUSINESS COLLEGE CONGRATULATIONS OUR PAST PRE - SCHOOL & NURSERY STUDENTS WHO HAVE SUCCESSFULLY PASSED THE YEAR 5 SHOLARSHIP EXAMNATION IN 2022 & 2023 BELOW ARE SOME OF THE TOP STUDENTS IN 2022 & 2023


T. Harishan 182 | S. Mathav 174 | S. Yogethan 171 | T. Saminan 171 | A. Ganalageesana 170 | A. Aksayan 170 | R. Aakash 168 | V. Dasika 165


S. Thishanika 164 | R. Priththiga 163 | N. Kuganthini 162 | I. Denuka 161 | T. Zigani 161 | P. Tharushapramoth 161 | G. Kathirshigan 157 | J. Narthagi 156


M. Herieth 153 | P. Sangeeth 152 | T. Aswin 151 | S. Vivilujaanrex 151 | S. Mary Alexshiya 151 | G. Kaswini 151 | R. Mark Liwinroy 150 | V. Joseph Jeron 147



P. Kamsana 145 | G. Armithaa 186 | R. Mithun 170 | L.R.D Donald 168 | J. Aksayan 168 | S.K.R. Anroshan 166


J. Thusari 162 | T. Sathurvaa 158 | V. Shamera 157 | J. Ebiron 155 | S. Arushan 155 | T. Abiroshan 154 | V. Shahilesh 153 | S. Aswin 151


R. Suruthika 150 | H. Vishalesh 149 | S. Mahisha 148 | T. Bavishana 147 | J. Jeromiya 147 | R. Thakshi 146 | B. Arathana 145 | S. Arish 144

S. Anush 151 | M. Ageesha 151 | S. Aathika 147 | S. Kariniga 165 | D. Neviah 153 | K. Kasvitha 153 | K. Kishanika 164 | K. Mathurshika 160

N. Akalyan 145 | N. Varshan 170

கடந்த 20 வருடத்தில் யாழ் குடா நாட்டில் அமைந்துள்ள எமது
9 வாழகங்களிலும் கல்வி கற்று வெளியேறிய 1500 மாணவர்களில்
இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இன்று பிரபல பாடசாலைகளில்
கல்விச்செயற்பாடுகளிலும் ஏனைய கல்விசார் செயற்பாடுகளிலும
முன்நிலையில் திகழ்ந்து கொண்டிருக்கும் எமது ஆயிரக்கணக்கான
மாணவர்களுக்கு அத்திவாரம் இட்டுக்கொடுத்த பெருமையுடன்
BRITISH BUSINESS COLLEGE தனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றது

NO, 653, NAVALAR ROAD, NALLUR, JAFFNA. 0774682951



## British Business College இன் புதிய அனுமதிகள்

British BUSINESS COLLEGE
Where Students Come First

BBC பாலர் பாடசாலையின்
20ஆம் வருடத்தில் சிறந்த கல்விச்சேவையுடன்
2024ஆம் ஆண்டிற்கான அனுமதிகள்

யாழ். குடாநாட்டில் 20 வருட ஆண்டு நிறைவை முன்னிட்டு
2024ம் ஆண்டிற்கான புதிய அனுமதிகளிற்கு கல்வி உபகரணங்கள் இலவசம்

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற நவீன கல்வித்திட்டம்
- ஆங்கிலமொழி மூல கற்கை வகுப்புக்கள்
- தமிழ் கட்டாய பாடம்
- மாதந்தோறும் செயற்பாட்டு திறனையும் அறிவையும் வெளிக்கொணரும் விஷேட சமூகம் சார் நிகழ்வுகள்
- விளையாட்டுடன் கூடிய கற்கைநெறிகள்

26th ANNIVERSARY

### நடன வகுப்புக்கள்

- பிரபல பரதநாட்டிய ஆசிரியரினால் நடாத்தப்படும் அனைத்து மாணவர்களுக்குமான பரதநாட்டிய வகுப்புக்கள்
- எமது மல்லாகம் மற்றும் மானிப்பாய் வளாகங்கள்



2 முதல் 5 வயது குழந்தைகளுக்கான கற்கைநெறிகள்

| பிரிவு | Play Group | Montessori | Pre School |
|---|---|---|---|
| வயது | 2 + முதல் 3 வரை | 3 + முதல் 4 வரை | 4 + முதல் 5 வரை |
| காலம் | 1 வருடம் | 1 வருடம் | 1 வருடம் |



- வருடத்தின் எந்த மாதத்திலும் குழந்தைகளை சேர்க்கமுடியும்
- கற்கை முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

வளாகங்கள்
நல்லூர் | யாழ்ப்பாணம் | மானிப்பாய் 1 | மானிப்பாய் 2 | சங்கானை
அளவெட்டி | மல்லாகம் | பருத்தித்துறை | சாவகச்சேரி

தலைமையகம் : British Business College
இல.653, நாவலர் வீதி நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல : 077 408 3656 / 077 468 2951


# மரண அறிவித்தல்

மலர்வு
22
.
11
.
1950



உதிர்வு
01
.
12
.
2023

## தம்பிராஜா கதிர்காமநாதன்

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா கதிர்காமநாதன் அவர்கள் கடந்த (01.12.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா, அன்னலட்சுமியின் பாசமிகு மகனும், தவாஸ்வரியின் அன்புக்கணவரும், ஜெயகிரிஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), கமலஜோதி (நெதர்லாந்து), தினேஸ் (வேலைத்தள மேற்பார்வையாளர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கேதாரகௌரி, ஸ்கைலாசநாயகி, பத்மநாதன், பத்மகௌரி, சத்தியகௌரி, ஞானகௌரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், உமா சங்கரன், சுரேஸ்குமார், நிஸானி ஆகியோரின் அன்புமிகு மாமனாரும், நடுஸ், உமா, தேவாஸ், கஜோல், தேவானி, கன்சிகா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூத்வுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 912 2820

KCS 27260|S-1

# மரண அறிவித்தல்

பிறப்பு
13
-
12
-
2000



இறப்பு
18
-
11
-
2023

## தீபக் மகேஸ்வரன்

France, Noisy Le Grand ஐப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தீபக் மகேஸ்வரன் அவர்கள் கடந்த (18.11.2023) சனிக்கிழமை அன்று அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் பாரதி வீதி, கச்சேரியடியைப் பிறப்பிடமாகக் கொண்ட மகேஸ்வரன் (இராசன்) - சிலோசனா தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கமலாதேவி, பரஞ்சோதி - கமலாம்பிகை ஆகியோரின் பேரனும், பிரண்டா (Brenda), லின்டா (Lynda) ஆகியோரின் பாசமிகு தம்பியும், காலஞ்சென்றவர்களான சந்திரேஸ்வரி - சேதுராஜா மற்றும் அருந்ததி - இரட்ணசபாபதி, மகேந்திரன், மனோகரன், மனோரஞ்சினி - சுபகுமார், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, மோகன்தாஸ் மற்றும் தேவதாஸ் ஆகியோரின் அன்பு மகன் - மருமகன் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (06.12.2023) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் (V), 1988, திருவோணம்
IT Professional Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
Tel : 0772321404 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் (V), 1990, பூரட்டாதி
Manager Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
Tel : 0777111786 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## வீடு வாடகைக்கு

1/5 மடம் வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள நவீன வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
மாதவாடகை - 30000/-
**071 224 0149**

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் (V), 1987, மிருகசீரிடம்
Engineer,Singapore மணமகனுக்கு மணமகள் தேவை.
Tel : 0772321404 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மணமகள் தேவை

யாழ். மாவட்டத்தில் வசிக்கும் விவாகரத்தான தாயுடன் வசிக்கும் காணி, சொந்த தொழில் உடைய மணமகனுக்கு மணமகள் தேவை. விதவைகள், விவாகரத்தானவர்கள், தனிமையில் உள்ளவர்கள் (40 வயதிற்கு இடையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)
**076 037 4643**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் KKS வீதியை முகப்பாகக்கொண்டு கொக்குவில் - தாவடி பகுதியில் மூன்று பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு : **076 540 9789**
**071 234 6789**

## உரும்பிராயில் குருதிக் கொடை

யாழ்ப்பாணம், டிசெ. 3

உரும்பிராய் லயன்ஸ் கழகமும், பாரி அறக்கட்டளை நிலையமும் இணைந்து நடத்தும் குருதிக் கொடை முகாம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ஓ-66)

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் (V), 1991, அவிட்டம்
IT Professional USA மணமகனுக்கு மணமகள் தேவை.
Tel : 0772321404 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவகுலம் (V), 1995, ரேவதி
Doctor,Srilanka மணமகளுக்கு மணமகன் தேவை.
Tel : 0777111786 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## மணமகள் தேவை

யாழிந்து கௌரவகுலம் (V), 1984, விசாகம்
Business UK Divorced மணமகனுக்கு மணமகள் தேவை.
Tel : 0777111786 | 0777751380
No.14 3/1G,37th Lane,Colombo-06.
www.realmatrimony.com

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் Beach Road இல் 645/8 இல் 3 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு
தொடர்பு : **077 442 4240**

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறூட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## காணி விற்பனைக்கு /குத்தகைக்கு

A-9 வீதி, சாவகச்சேரி நகரிலுள்ள வர்த்தக நிறுவனங்கள், திருமண மண்டபம் போன்றவை அமைக்கக் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**T.P: 077 6231 025**

## காரைநகர் அபிவிருத்திச் சபை
## புதிய யாப்பினை அங்கீகரிப்பதற்கான விஷேட பொதுக் கூட்டம்

தலைமை : திரு. விஸ்வலிங்கம் ஹம்சன் (காரைநகர் அபிவிருத்திச் சபை தலைவர்)
இடம் : காரைநகர் பிரதேச கலாச்சார மண்டபம், வலந்தலைச் சந்தி, காரைநகர்.
காலம் : 17.12.2023 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 10.00 மணி
குறிப்பு :

02.12.2023 திகதி வரை இணைந்து கொண்ட ஆயுள்கால அங்கத்தவர்கள் மற்றும் 2023ம் ஆண்டு வருட சந்தா செலுத்திய அங்கத்தவர்களையும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

காரைநகர் அபிவிருத்தி சபை
சின்னாலடி காரைநகர்
தொலைபேசி : 021 221 1757
03.12.2023

திரு. பொன்னம்பலம் பரந்தாமன்
செயலாளர்

# வேலை வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுக்கத்தில் இலங்கையின் முன்னணி முந்திரி உற்பத்தியாளரான **Royal Cashew Company** இன் புதிதாக திறக்கப்படவுள்ள காட்சியறைக்கு ஆண்/பெண் (பயிற்சி பெற்ற/ பயிற்சி பெறாத விற்பனைப் பிரதிநிதிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

**தகுதிகள்**

- வயது 25-40 க்கும் இடையில்
- ஜி.சி.இ சாதாரண தரம்
- யாழ்ப்பாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்கள்
- தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் புலமை (சிங்களத்தில் புலமை மேலதிக தகுதியாகக் கருதப்படும்)
- தகுதியானவர்கள் தங்கள் விண்ணப்பங்களை **carrers@royalcashew.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
- நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியை மேலே குறிப்பிடவும்.

(CS 53049) S-1

**மேலும் விவரங்களுக்கு அழைக்கவும்: 077 805 2520**

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த (13.11.2023) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

## அமரர் சிவசுப்பிரமணியம் கமலாம்பிகை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (01.12.2023) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. இன்று (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் பங்குபற்றி அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தட்டாதெரு, பசுபதியார் வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
077 644 7381, 076 317 8227

(cs26624) (N.1) குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22 . 04 . 1941



மறைவு
14 . 12 . 2023

கலட்டியை பிறப்பிடமாகவும் 1/5, மடம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

## திருநாவுக்கரசு செல்வராணி

கரு சுமந்தவள் கண் மூடினாள்
காவல் இருந்தவள் கண்ணீராகினாள்
நிலவு காட்டி சோறு ஊட்டிட
நித்தம் ஒரு கதை சொன்னவள் சொல்லாது சென்றது ஏனோ?
பரிதவிக்கும் பிள்ளைகள், பாசம் மறந்து பறந்தனையோ
கண்ணீர் பூக்களால் அஞ்சலிக்கிறோம்.

அன்னாரின் ஆத்மா இறைபதம் அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

1/5, மடம் வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

யாழ்ப்பாணம் கைதடி,
குருநகர்.
OIC - 1300/-
JSO - 1200/-

தொடர்பு : 075 363 2025

### தேவை

வீட்டில் தங்கியிருந்து வயதான பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கும், சமையல் செய்வதற்கும் 40 - 55 வயதுக்குட்பட்ட நம்பிக்கைக்குரிய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

077 958 3573

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னாகத்திற்கு இடைப்பட்ட பகுதிக்குள் சிறந்த சூழலில் 04 பேர் கொண்ட குடும்பம் வசிப்பதற்கு வீடு வாடகைக்குத்தேவை.

077 488 5514

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குலம் (V). 1984 பூசம். London மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

077 443 7326
077 040 2658

### வாடகைக்கு

யாழ்பாணத்தில் 4 Bed Room, 2 BathRoom, Parking வசதிகளுடன் Tiles பதிக்கப்பட்ட வீடு 2 வருடங்களுக்கு வாடகைக்கு கொடுக்கபபடும். முற்பணம் 5 இலட்சம் மற்றும் பலசரக்கு கடை தளபாடங்களும் வடகைக்கு கொடுக்கப்படும்

TP : 076 979 3163

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவகுலம்.(V)
1986 சித்திரை கிரகபாவம். 14 1/4.
செவ்வாய்
2இல், 2ம் பாதம்.
சுயதொழில் செய்யும்
மணமகனுக்கு
மணமகள் தேவை.


தொடர்பு:
0775470631

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரகுலம் (V) 1993 பட்டதாரி முன்னிலையும் பெரியதுமான Group of Companies உயர்பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

075 8631 281


## மரண அறிவித்தல்



தோற்றம் 06 - 06 - 1952
மறைவு 30 - 11 - 2023

### பொன்னுத்துரை யோகரட்ணம்

**(இ.போ.ச. யாழ்சாலை மற்றும் மன்னார் சாலை த.போ.க ஓய்வு பெற்ற சாரதி)**

நல்லூரைப் பிறப்பிடமாகவும், நந்தாவில் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை யோகரட்ணம் அவர்கள் கடந்த (30.11.2023) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் பராசக்தி தம்பதியினரின் அன்பு மகனும், தனலட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், கனகாம்பிகை தம்பதியினரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் ராணி, ரதி, ரஞ்சி ஆகியோரின் அன்பு மிக்க சகோதரனும், ராஜ்கண்ணன் (பிரான்ஸ்), ராஜ்குமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ராஜ்மதன் மற்றும் லக்ஸ்சுமன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜகௌரி (பிரான்ஸ்), குமுதினி (பிரான்ஸ்), தர்ஷிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கிஷாந், கயிந், அஜந் (பிரான்ஸ்), சுஜீவன், சாருஜன், சனா (பிரான்ஸ்), ஷேணுஜா, அக்ஷரா ஆகியோரின் அன்புமிக்க பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை மு. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


**தகவல்: குடும்பத்தினர்**
**சுமன் - மகன் :**
**077 344 8571**

**நந்தாவில் லேன்,**
**கொக்குவில் கிழக்கு.**

(CS 27094)(K-1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

03.12.2023



தோற்றம் 29 . 01 . 1944
மறைவு 03 . 12 . 2022

### அமரர் சைமன் செல்வநாயகம்

*உன்னதமானவருடைய தயவினால் அசைக்கப்படாதிருப்பார்*
*(சங் - 21:7)*

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை
எம் சோகம் - மாண்டவர்கள்
மீண்டதில்லை ஆனாலும் மாறிடாது
நம் பாசம் - காலத்தின்கோலமிது
கனத்த மனதுடன் கடந்து போகின்றோம்
கண்ணீரோடு.......

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நவாலி

## மரண அறிவித்தல்

தோற்றம் 21.08.1945
மறைவு 28.11.2023

### சுந்தரலிங்கம் சாரதா


நாயன்மார்கட்டு நல்லூரை பிறப்பிடமாகவும், தற்பொழுது அம்மா முதியோர் இல்லம் கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் சாரதா (28.11.2023) செவ்வாய்க்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் சுந்தரலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குருசாமி நாகரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் அன்னபூரணம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை புகையிரத நிலைய வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள அம்மா முதியோர் இல்ல மண்டபத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் தகனம் செய்யப்படும். இந்த தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : **பொறுப்பாளர்,**
**அம்மா முதியோர் இல்லம்**

## மரண அறிவித்தல்



தோற்றம் 10 . 01 . 1940
மறைவு 30 . 11 . 2023

### வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை (ஐயண்ண)

கட்டைவேலி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை அவர்கள் (30.11.2023) வியாழக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பார்வதி தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகமணி, பூமணி, தேவி ஆகியோரின் அன்புச்சகோதரனும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, தம்பிஜயா, வல்லிபுரம் மற்றும் செல்லம்மா, மகேஷ்வரி, செல்லத்துரை (கோபாலு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கருணாகரன் மற்றும் கௌரி, சாந்தினி, சுதாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அன்னலட்சுமி (துங்கம்), சாரதா, வரதராஜன், கலாதீபன், இந்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவசோதி அவர்களின் சிறிய தந்தையும், கஜேந்திரன் - அருந்தசா, கோமதன், கோகிலன், சிந்துயா, ஜதுஷன், பிறீனா, ஹம்ஷாயினி, ஜானுஷன், அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனும், அக்ஷனா, ஆதிரா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை நண் பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வேரோண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**19/2, காளிகோவிலடி,**
**கட்டை வேலி,**
**கரவெட்டி.**

தகவல்:
**குடும்பத்தினர்**

(CS) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீனவர் காயம்

பருத்தித்துறை சுப்பர்மடம் கடலில் படகு விபத்துக்குள்ளான தில் மீனவர்ஒருவர் மயக்கமடைந்தார். இவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். நேற்றுக் காலை இந்தச் சம்பவம் நடந்துள்ளது. பருத்தித்துறை சுப்பர்மடத்தை சேர்ந்த குமரகுருசாமி அருநேசராசா என்ற மீனவரே பாதிக்கப்பட்டுள்ளார். (எ-100)

**தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் Youtube channel ஒன்றிற்கு English இல் பூரண அறிவுடைய Lady Presenter தேவை.

தொடர்பு: **077 756 1066**

**தேவை**

ஆண்டு 6 மாணவனுக்கு பாட சாலையில் Shadow Teacher (நிழல் ஆசிரியர்) ஆக வேலை செய்யகூடிய A/L கற்ற பெண் தேவை

விபரங்களை **077 733 6533** இலக்கத்திற்கு **SMS** செய்யவும்.

**தேவை**

திருநெல்வேலியில் அமைந்துள்ள 04 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டுவேலைக்கு ஆள் தேவை (பெண்). அருகில் இருப்போர் விரும்பத்தக்கது. சம்பளம் 30.000/

**தொடர்பு 076 306 3306**

திருநெல்வேலியில் உள்ள புடவை வியாபார நிலையத்திற்கு ஆள் தேவை (பெண்). வேலை நேரம் -09.00Am to 07.00Pm சம்பளம் 30.000/ (CS 27267) S-1

**தொடர்பு 076 306 3306**

**புதிய Appartment விற்பனைக்கு**

தெஹிவளையில் புதிய Luxuary தொடர்மாடி விற்பனைக்கு. COC அனுமதி உண்டு.

1330 சதுர அடி. 03 அறைகள். 02 குளியலறை. Super Luxuary fittings with Cubicalo தேக்கிலான கதவுகள். Gym, Swimming pool, Jacuzzi, Kids pool, Long foot Top Garden, 02 Passanger lift, தேக்கிலான Modern Pantry மற்றும் வாகனம் நிறுத்தும் வசதி Car Lift.

பிரதான வாசல் கதவு 9 அடி உயரம் மற்றும் Lights fittings 900x900, Marble Floor Tile, Senok German Aluminium.

**தொடர்பு: 077 720 5171**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**உயர்பட்டப்படிப்புகள் பீடம்**
**புதிய அனுமதிகள்**

1. கல்வியியல் முதுமாணி (MED) – 2023/24 (அணி XV) யாழ்ப்பாண நிலையம்
2. பண்பாட்டியலில் முதுமாணி (MCST) – 2023/24 (அணி V)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வலைத்தளத்தில் (www.grad.jfn.ac.lk) பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி : 22.12.2023

மேலதிக தொடர்புகளுக்கு : 0212223608

**பதிவாளர்**
**01.12.2023**

**மதிய உணவு**



வாடிக்கையாளர்களின்
வேண்டுகோளுக்கு இணங்க
மீண்டும் இன்றிலிருந்து (03.12.2023)
ஞாயிற்றுக்கிழமை
**சைவ மதிய உணவு**
பெற்றுக்கொள்ளலாம் என்பதனை
அறியத்தருகின்றோம்.
(CS 27264) S-1

**ராஜா கிறீம் ஹவுஸ்**
**198, கோவில் வீதி, நல்லூர்.**
**021-221-4479**

## மரண அறிவித்தல்

பிறப்பு 18 . 09 . 1977



இறப்பு 02 . 12 . 2023

### திருமதி வசீகரன் சுதர்சினி

தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசீகரன் சுதர்சினி நேற்று (02.12.2023) சனிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் மற்றும் யோகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், தனபாலசிங்கம் தங்கச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், வசீகரன் (யா/நவாலி மகாவித்தியாலயம் - ஆசிரியர்) பாசமிகு மனைவியும், சங்கவி (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), ஹரிகரன் (யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், றஜீவன் (பிரான்ஸ்), சுபாசினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மாலதியின் (இணுவில் மத்திய கல்லூரி - ஆசிரியர்) அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


பத்தானை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
077 843 5384

தகவல்:
**குடும்பத்தினர்**

(cs.53039) (N.1)

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 05 . 1939



மறைவு 01 . 12 . 2023

### ஆனந்த நடராஜா சுரேந்திரா (வின்சன் டி போல்)

**(மின் தொழில்நுட்பவியலாளர்)**

ஈழத்து சித்தர்களிலொருவராகிய அருளம்பல சுவாமிகளின் பேரனான சுதுமலையை பிறப்பிடமாகவும், சூராவத்தை நெல்லியடி பிரதேசங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சுரேந்திரா (வின்சன் டி போல்) அவர்கள் கடந்த (01.12.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆனந்த நடராஜா-இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், யோகரத்தினம் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், மித்திரதேவா (கனடா), இராஜகுமாரி (கனடா), காலஞ்சென்றவர்களான ருத்திரதேவா, ரவீந்திரா, கரீந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற றொபின்சன் றேமன் (ராஜா) மற்றும் பிருந்தா (கனடா), றுஜந்தன் (மின் தொழில்நுட்பவியலாளர்), றுஜந்தா (சுகாதார திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயச்சந்திரன் (கனடா), அன்ரனிற்றா நிசாந்தி, யோன்சன் ராஜ்குமார் (ஆசிரிய ஆலோசகர், யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனோலா, ஜெனிஸ்ரன், ஜெறி, கெவின், டவீற்றா, டனீக்கா, அபிஷேக், அனந்திகா, அனோமிகா ஆகியோரின் பேரன்புடைய பேரனும், காலஞ் சென்றவர்களான அழகரத்தினம், ஞானரத்தினம், பூபாலசிங்கம், ரத்தினசிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் மரியலொறற்றா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04.12.2023) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு 859/18, ஆஸ்பத்திரி வீதி (U.S ஹொட்டேல் அருகில்) என்ற முகவரியில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, சுண்டிக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**859/18, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 308 6944, 076 634 7128**

(CR 41126) A-1

## மரண அறிவித்தல்

மண்ணில் 28 . 07 . 1934



விண்ணில் 30 . 11 . 2023

### கந்தையா திரவியம்

அரசடிச் சந்தி மட்டுவில் வடக்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா திரவியம் அவர்கள் கடந்த (30.11.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு சின்னப்பிள்ளை தம்பதி யரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், மற்றும் இலண்டனில் வசிப்பவர்களான நாகேஸ்வரி, மதியழகன், கலையழகன், சுவிஸில் வசிப்பவர்களான துரைராஜா, இதயகுமார், கவிஞர் ஜெனிவா அருந்தவராஜா, ஜேர்மனில் வசிப்பவர்களான சந்திரமோகனா, அன்பழகன் மற்றும் சிவதுரை (உரிமையாளர் மிஸ்ரர் அன்ட் மிஸ்சிஸ் புடவையகம் - கைதடி), அறிவழகன் (விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம், மகரகம) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மட்டுவிலில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசடிச் சந்தி,**
**மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.**

தகவல்:
**க.அறிவழகன்**
**(மகன்-071 9611732)**

(CR 41117) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போட்டியின்றி...

இலங்கைத்தமிழ் அரசுக் கட்சியின் பொதுக் குழுக் கூட்டம் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது. தலைவர் பதவிக் கான பெயர்களைப் பரிந்துரைக்கும் காலம் கடந்த மாதம் 30ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்தது. யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் சி.சிறீதரன் ஆகியோர் தலைமைப் பதவிக்கு பிரேரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இதுவரை காலமும் தமிழ் அரசுக் கட்சியின் தலைமை ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டு வந்த நிலையில் இம்முறை இருவர் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுகின்றனர். இது தொடர்பாக அந்தக் கட்சியின் தற்போதைய தலைவர் மாவை.சோ.சேனாதிராசாவிடம் வினவிய போது,

தலைமைப் பதவிக்கு விண்ணப்பித்துள்ளவர்கள் தொடர்பில் தற்போது எதுவும் தெரிவிக்கமுடியாது. கட்சித் தலைமை அலுவலகத்துக்குத்தான் விண்ணப்பித்திருப்பார்கள். அவர்கள் சரியான முறையில் விண்ணப்பித்திருக்கின்றார்களா என்பது இன்னமும் ஆராயப்படவில்லை. அதன் பின்னரே அது தொடர்பில் பகிரங்கமாகக் கூறமுடியும்.

மனுத்தாக்கல் செய்தவர்களை இணக்க அடிப்படையில் பதவிகளை வழங்குவதே எமது கடமை. இணக்க அடிப்படையில் தலைவரைத் தெரிவு செய்வதற்கே நாம் உத்தேசித்துள்ளோம். போட்டிபோட விடுவதற்குத் தயாராக இல்லை. கட்சியின் தலைமைப்பீடம், செயலர், நிர்வாகிகள் ஆகியோர் கொண்டகுழு, வேட்பு மனுத் தாக்கல் செய்வர்களுடன் பேச்சு நடத்த இருக்கின்றது. கட்சியின் மாநாட்டுக்கு முன்னர் மனுத் தாக்கல் செய்தவர்களை அழைத்து ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தி, போட்டியின்றி ஏகமனதாகப் புதிய தலைவரைத் தெரிவுசெய்வோம் - என்றார். (அ-ஒ-5-125)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 04 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.
- திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.
- இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 km.
  திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 km.
  நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 km.
- திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 km.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
பார்வையிடும் நேரம்:-
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**தொடர்புகளுக்கு:- ஜெயம்**
**077 814 7389,077 986 5457**

(CS 26820) A-1

## விஷ்டம்
### தொழினுட்பக் கல்லூரி
இல 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

**A/L 2025** தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கான
**புதிய வகுப்புக்கள் ஆரம்பம்**

காலம்:- ஞாயிறு (03.12.2023)
நேரம்:- காலை 08.00 மணி
தரம், தனித்துவம், உயர்ந்த பெறுபேறு
இதுவே எமது இலக்கு!

தொடர்புகளுக்கு- **077 248 7774/076 552 9093**

(CR 41119) S-1

## காணி விற்பனைக்கு


யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 31 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: **071 173 3911**
**076 853 5022**
**076 213 7239**

(CS 27104) A-1


# மரண அறிவித்தல்




## கனகசுந்தரம் முருகமூர்த்தி
### (உரிமையாளர் வைர மாளிகை)

வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் முருகமூர்த்தி நேற்றுமுன்தினம் (01.12.02023) வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பவானி முருகமூர்த்தி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கனகசுந்தரம் சிவகாமிப்பிள்ளை (இளையாச்சி) ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நல்லத்தம்பி (ஊழியன் அச்சகம்), அல்லியம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், ஜெயந்தினி, செந்தூரான், கனவேலழகன், குறிஞ்சிக்குமரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீகிருஷ்ணராஜா, சங்கீதா, றோகிலா, நித்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும், சஜீத், கனகவேல், வேல்குமரா, நிலா, திருவேரகன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தில்லைநாயகி, செல்வநாயகி, நடேசன், சுந்தராதேவி, சகுந்தலாதேவி, மயிலேறும் பெருமாள் மற்றும் தவமணி தேவி ஆகியோரின் சகோதரனும், சுரேந்திரன், தனலட்சுமி, காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் பாலேந்திரன், ஸ்ரீகுமாரி, விஜயகுமாரி, லலிதகுமாரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை (04.12.2023) அன்று காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் (ஊரிக்காடு) நடைபெற்று தகனக்கிரியைக்காக வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் :**
**குடும்பத்தினர்**
மு. செந்தூரான் (மகன்)
(077 788 8215)

379, KKS வீதி,
வல்வெட்டித்துறை.

(CS 53035) (AK-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
11 - 03 - 1945



இறப்பு
03 - 12 - 2021

## அமரர் சீதாலட்சுமி பத்மநாதன்

*திதி: தேய்பிறை சதுர்த்தசி (11.12.2023)*

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஈராண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி !!!*

உடுவில் தெற்கு,
மானிப்பாய்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள் மற்றும்
பேரப்பிள்ளைகள்

(CS 53018) (AK:1)

## நீர்க்கசிவை தடுப்பதற்கு

1 சதுர அடி 150/- இல் இருந்து

Finex ஸ்தாபனத்தாரின்
ஏகவிநியோகஸ்தர்களிடம் இருந்தும்
உலகத்தரமிக்க இரசாயன பொருள்களை
விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

5% விசேட விலைக்கழிவு

சிறிய நீர்க்கசிவானால் இரசாயனப் பொருள்களை பெற்று
எமது தொழினுட்ப உதவியுடன் நீங்களே சீர்செய்துகொள்ளலாம்.
*போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்*

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
FINEX
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

## வேலையாள்கள் தேவை

**பிரபல ஹொட்டல் ஒன்றிற்கு**

ஹொட்டல் துறையில் அனுபவம் வாய்ந்த
- முகாமையாளரும்,
- அறை சுத்திகரிப்பாளரும்

தேவை.

(cs.53031) (N.1)

077 798 3933, 021 222 1889


## எரிவாயு விலையில் மாற்றமில்லை

கொழும்பு, நவ.3
பண்டிகைக் காலத்தில் கருத்தில் கொண்டு எரிவாயு சிலிண்டர்களின் விலையில்திருத்தம் செய்யப்படாது என்று லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.(எ-இ)


## SPOKEN ENGLISH WITH GRAMMAR

யாழ்நகரில் தனி, குழு வகுப்பு
ஆண்டு 7 to GCE OL, AL,
பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.

K.Ganesh B.A 077 766 8725

## வீடு வாடகைக்கு தேவை

நல்லூர் பிரதேசத்திற்கு
அருகாமையில் உள்ள வீடு
வாடகைக்குண்டு.

077 334 9181

## வீடு விற்பனைக்கு

மாவிட்டபுரத்தில் 1 பரப்பும்
04.84 குழிகளினுடைய வீடு
விற்பனைக்கு

077 209 8826

## கணித விஞ்ஞான வகுப்புகள்

தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான
மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான
வகுப்புகள் தனியாகவும், குழுவாகவும்
கற்பிக்கப்படும்

CS 27090 (AK - 1)

தொடர்புக்கு: 077 074 7906, 076 498 9961
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்

## தேவை

நல்லூர். கந்தர்மடம். யாழ்ப்பாணம்
ஆகிய பிரதேசங்களுக்கு
அருகாமையில் (அமைதியான
இடத்தில்) வீடு தேவை (4 பேர்
கொண்ட வைத்தியர் குடும்பத்திற்கு).

தொடர்பு : 070 234 9949

## காணி விற்பனைக்கு

புதுவளவு மட்டுவில்
தெற்கு சாவகச்சேரியில்
உள்ள 15 பரப்புக்காணி
விற்பனைக்கு

தொடர்பு : 077 869 4519

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations

**ஆவரங்கால் மக்கள் ஒன்றியத்தின் (கனடா)**
**அனுசரணையுடன் நடாத்தப்படும்**
**"இலவசக் கல்விப் பிரிவில்" கல்வி கற்று தரம் - 5 புலமைப் பரிசில்**
**பரீட்சையில் (2023) சித்திபெற்ற மாணவர்களையும், கற்பித்த**
**ஆசிரியரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**



திரு.சோ. திருக்குமரன்
(ஆசிரியர்)



சு. வர்ஷனா
**172** புள்ளிகள்



இ. சிவானி
**170** புள்ளிகள்



வி. ஹரிஸ்வின்
**167** புள்ளிகள்



தீ. பவசாயினி
**167** புள்ளிகள்



ப. அக்ஷிகன்
**166** புள்ளிகள்



ர. யதிஸ்னா
**163** புள்ளிகள்



வா. தாரிகா
**160** புள்ளிகள்



க. முதல்வன்
**156** புள்ளிகள்



இ. சனோஜன்
**155** புள்ளிகள்



ப. தருண்ஜா
**154** புள்ளிகள்



பா.மகிந்
**148** புள்ளிகள்

ஆவரங்கால் மக்கள் ஒன்றியத் தினருக்கும் (கனடா), கற்பித்த ஆசானுக்கும்

மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பெற்றோர்கள்**




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Registered as a Newspaper


# சஞ்சீவி

பக்கங்கள்: 08

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 கார்த்திகை 17 ஞாயிற்றுக்கிழமை (03.12.2023)

மானம் சிறிதென்றெண்ணி
வாழ்வு பெரிதென்றெண்ணும் ஈனர்க்கு
உலகம் தனில்கிளியே
இருக்க நிலைமையுண்டோ
– பாரதியார்





# போலித் துவாரகாவும் பின்னுள்ள மர்மங்களும்

எஸ்.பிரஜீவன்ராம்

இலங்கையில் கார்த்திகை மாதம் என்பதே பதற்றம் நிறைந்ததுதான். அதற்கு முக்கியமான காரணம் கார்த்திகை - 27 இல் தமிழ்மக்களால் நினைவுகூரப்படும் மாவீரர் நாள். தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்காக தம் உயிரை விதையாக்கிய மாவீரர்களை நினைவுகூரும் இவ்வருடக் கார்த்திகை மாதம் ஆரம்பம் முதலே பதற்றம் நிறைந்ததாகவும் தமிழ் மக்கள் மனதில் பல ஐயங்களையும் புதிய கேள்விகளையும் விதைத்த மாதமாகவும் கடந்துள்ளது. மாவீரர்நாளில் வெளியான ஒரு காணொலியே இந்தச் சந்தேகங்களுக்கு மூலகாரணம்.

புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகள் துவாரகா உயிருடன் இருப்பதாகவும், அவர் மாவீரர் நாள் உரை நிகழ்த்துவதாகவும் சமூக வலைத்தளங்களில் அந்தக் காணொலி பரவியது. இப்படியொரு காணொலி வர இருப்பதை ஒரு மாதத்துக்கு முன்னரே ஆங்கில, சிங்கள, தமிழ் ஊடகங்கள் எதிர்வு கூறியிருந்தன. கிட்டத்தட்ட பதினொரு நிமிடங்கள் கொண்டதாக அந்தக் காணொலி அமைந்திருந்தது. அதில், தன்னை தலைவர் பிரபாகரனின் மகள் என அடையாளப்படுத்திக் கொள்ளும் ஒரு பெண், விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் குறித்தும் அதைச் சிங்கள அரசு வல்லரசு நாடுகளின் துணை கொண்டு வலுவற்றதாக்கியதைப் பற்றியும் கூறுகின்றார். அதன் பின்னர் சமகால அரசியல் குறித்து கூறுகையில், அரசியல் போராட்டம் வலுப்பெற தமிழ் மக்கள் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம் என்ற கருத்தை முதன்மைப்படுத்தியிருந்தார். காணொலியில் தலைவரின் மகள் துவாரகா என அடையாளப்படுத்திக் கொள்ளும் அந்தப்பெண் கூறும் கருத்துகள் யதார்த்தமானவை தான். ஆனால் சிக்கலென்னவெனில், அவர் கூறிய கருத்துகளை விடவும் மக்கள் மனதில் துருத்திக் கொண்டிருப்பது, 'அவர் உண்மையில் தலைவரின் மகள் துவாரகா தானா ?' என்ற கேள்வியே.

காரணம் 2009 யுத்தம் முடிவடைந்த பின்னர் தலைவரின் மகளும் மனைவியும் உயிருடன் இருக்கிறார்கள் என ஒரு தரப்பினர் கூறினர். ஆனால் இன்னொரு தரப்பினரோ 'அவர்கள் உயிருடன் இல்லை' என வாதிட்டார்கள். முள்ளிவாய்க்காலின் இறுதிக்காலத்தை மூடியிருந்த புதிர் வாழ்வு, தலைவரினதும், அவர் குடும்பத்தினதும் உண்மை நிலையை எவரும் உறுதிசெய்யமுடியாத அளவுக்கு மாற்றியிருந்தது.

இதனாலேயே இப்போது காணொலியில் தோன்றிய பெண் உண்மையில் தலைவரின் மகள் தானா? அல்லது இது தமிழ் இன விரோதிகளால் திட்டமிடப்பட்டஒரு நிகழ்ச்சி நிரலில் நடைபெறும் நிகழ்வா ? என்ற கேள்விகள் விஸ்வரூபமெடுத்துள்ளன.

இதுவரைகாலமும் வெளிப்படாத தலைவரின் மகள் ஏன் இப்போது வெளிப்படவேண்டும்?

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்கள் பலருக்கும் துவாரகாவை நன்கு தெரியும். ஆனால் அவர்கள் கூட 'இவர்தான் தலைவரின் மகள்' எனக் கூறாமல் மௌனம் காக்கின்றனர். இப்படியான சூழ்நிலையில் காணொலியில் தோன்றிய பெண்ணுக்கே, தலைவரின் மகள் தானேதான் என்பதை ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டிய கடப்பாடு உள்ளது.

தலைவரின் மகள் என்பதைச் சரியான ஆதாரத்துடன் வெளிப்படுத்துவது அவரின் உயிருக்கு அச்சுறுத்தலாக அமையும் என அந்தப் பெண்ணோ அல்லது அவரின் ஆதரவாளர்கள் கூறுவார்களோ எனின் அவர் தலைவரின் மகளாக இருக்கமாட்டார். காரணம் உயிர்ப்பயம் உள்ளவர் நான் தலைவரின் மகள் என வெளிப்படுத்தி இருக்கமாட்டார். அத்துடன் உயிர்ப்பயம் உள்ளவர் தலைவரின் மகளாகவும் இருக்கமாட்டார்.

உண்மையில் அவர் தலைவரின் மகள் என்பதை விஞ்ஞானபூர்வ ஆதாரங்களுடன் நிரூபிக்க ஏராளம் வழிகள் இருக்கின்றன. அதன்வழியே அவர் துவராகா என தன்னை நிரூபித்தால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட சந்தேகத்தை இல்லாதாக்கலாம்.

கடந்த வருடம் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்ற தகவல் வெளிவந்த நிலையில், இந்த வருடம் அவர் மகள் உயிருடன் இருப்பதாக காணொலிவெளியாகி உள்ளது. இந்த நிகழ்ச்சி நிரலின் நோக்கம் என்ன? இதற்குச் சில காரணங்கள் இருக்கலாம்.

இலங்கை அரசு, சிதைவுற்றுக் கிடக்கும் சிங்கள தேசியவாதத்தை உயிர்ப்புறச் செய்வதற்காகவும், இன மோதலைத் தூண்டிவிட்டு இலங்கையில் நிலவும் பொருளாதார ரீதியான பிரச்சினைகளில் இருந்து மக்களைத் திசை திருப்புவதற்கும் இந்தச் செயலைத் திட்டமிட்டு மேற்கொண்டிருக்கலாம். இது ஒரு காரணம்.

மற்றைய காரணம், எஞ்சியுள்ள விடுதலைப் புலிகளின் செயற்பாட்டையும், அவர்களின் வலையமைப்பின் ஆழம் பற்றி அறிந்து கொள்ளவும் இவ்வாறு பொய்யான பரப்புரைகளை கட்டவிழ்த்து விட்டிருக்கலாம்.

இத்தகைய பொய்ப்பிரசாரம் மூலம் உண்மையான தலைவரின் மகள் வெளிப்படலாம் அல்லது இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்கள் அறிக்கைகளை விட்டு தம்மை அடையாளப்படுத்தினால், அவர்களை இனங்கண்டு ஒழிக்க நினைக்கும் சதியாகவும் இருக்கலாம். சிங்கள அரசாங்கம் திட்டமிட்டு இவ்வாறான போலித் தகவலைப் பரப்பி இருக்குமானால் ஒன்று மட்டும் உண்மை, அரசாங்கத்தில் உள்ள உயர்மட்ட அரசியல்வாதிகளுக்கு தமிழ்மக்கள் மீது மட்டும் அல்ல சிங்கள மக்களின் நலன் சார்ந்தும் அக்கறை இல்லை என்பதே அது.



இலங்கைத் தீவில் அமைதி நிலவுவதையும் அவர்கள் விரும்பவில்லை. தமது சுயநல அரசியலுக்காக அவர்கள் எதையும் செய்வார்கள் என்பதையும் இது காட்டி நிற்கும். இவ்வாறான போலித் தகவல்களை வெளியிடுவதன் மூலம் தமிழ் மக்கள் மனத்தில் விரக்தியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தி புலிகள் தொடர்பில் மாறுபட்ட கருத்தியல்களை உருவாக்கமுடியும். இந்தக் கருத்தியல் முரணை அடிப்படையாகக் கொண்டு பின்னாளில் தமிழ் மக்களை பிளவுபடுத்தி, தங்களுக்குள் தாங்களே மோதிக்கொள்ளும்நிலைக்குக் கொண்டு செல்வதற்கான நிகழ்ச்சிநிரலாகவும் துவாரகாவின் காணொலியைக் கொள்ளமுடியும்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை வழிநடத்த தலைவர் அல்லது தலைவரின் வாரிசுகளால் மட்டுமே முடியும் எனும் நம்பிக்கையை விதைத்து, அவர்களுக்காக தமிழ் மக்களைக் காத்திருக்க வைப்பதன்மூலம் தலைமை அற்ற இனமாக தமிழ் இனத்தை மாற்றும் ஒரு திட்டமாகவும் இது இருக்கலாம் .

எமக்கு அடிபணிய மறுத்தால் மீண்டும் புலிகளை உருவாக்கி, ஒரு போராட்டத்தைத் தோற்றுவிக்கத் தயங்கமாட்டோம்' என இந்திய அரசு மறைமுகமாக இலங்கை அரசாங்கத்தை எச்சரிக்கை செய்வதற்கான 'றோ'வின் நிகழ்ச்சி நிரலாகவும் இது இருக்கலாம்.

குறித்த பெண் தலைவர் மக்கள் துவாரகாவா? இல்லையா? என்பதை கடந்து நாம் ஒரு விடயத்தை நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் வெற்றி பெற தலைவர் ஒருவர் வெளியில் இருந்து வர வேண்டும் என சிந்திக்காது, எங்களுக்குள் ஒரு தலைவரைத் தேடவேண்டும். எங்களுக்கான தலைவன் என்றோ ஒருநாள் எங்களிடமிருந்தே இருந்தே தோன்றுவான், தலைவர் பிரபாகரனைப் போல.

■

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டுப் பொறுப்பற்ற புதுடில்லிச் சந்திப்பு

அ.நிக்ஸன்

ஜே.வி.பி.யின் அரசியல் கொள்கைகள் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைக்கு ஏற்புடையவையல்ல. ஆனால் கட்சி அரசியலுக்குரிய அத்தனை பண்புகளையும் ஜே.வி.பி.யின் அடித்தள உறுப்பினர்கூட பின்பற்றும் ஒழுக்கம் முதன்மை பெறுகின்றது.

கட்சித் தலைமைக்குத் தெரியாமல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்திப்பதில்லை.

நாடாளுமன்றவிவாதங்களில்ஒவ்வொருவிடயதானங்களிலும், தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் மாத்திரமே உரையாற்றுவர். எல்லா விடயங்களையும் எல்லா உறுப்பினர்களும் தாம் நினைத்தபாட்டுக்குப் பேச முடியாது. தேர்தலில்கூட போட்டியிடும் உறுப்பினர்கள் கட்சியின் சின்னத்தை மாத்திரமே பிரசாரப்படுத்துவர். விருப்பு இலக்கங்களை ஜே.வி.பி. வேட்பாளர்கள் எவரும்தேர்தல்பிரசாரத்தின்போது விளம்பரப்படுத்துவதில்லை. கட்சியின் கூட்டுப் பொறுப்பும் கட்சிக்கான முன்னுரிமையும் மட்டுமே தேர்தல் பிரசாரங்களில் பிரதான வகிபாகமாக இருக்கும். ஆயுதப் போராட்டம் ஒன்றின் ஊடாக வளர்ச்சியடைந்த கட்சி என்ற கட்டுப்பாடும் ஒழுக்கமும் ஏனைய பிரதான சிங்களக் கட்சிகளைவிடவும் ஜே.வி.பி.யிடம் புனிதமடைகிறது. ஆனால் எண்பது வருட அரசியல் விடுதலைப் போராட்ட அனுபவம் கொண்ட ஈழத் தமிழ்ச் சமூகத்தின் பழமைக் கட்சியான தமிழரசுக் கட்சியில் "கட்டுப்பாடு" "ஒழுக்கம்" என்ற முதன்மைப் பண்புகள் இருப்பதாகத் தெரியவில்லை. யாரும் யாருக்கும் கட்டுப்படுவதில்லை.

ஆயுதப் போராட்டம் நடத்திப் பின்னர் ஜனநாயக வழியில் அரசியலில் ஈடுபடும் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., புளொட் போன்ற இயக்கங்களிடமும் தத்தமது நோக்கங்களுக்குரிய ஒழுக்கத்தைக் காணவில்லை. மாறாகத் தனித்தனி அரசியல் ஈடுபாடும், இந்திய அரசின் நெளிவு சுழிவுகளுக்கு அமைவாக வளைந்து கொடுக்கும் வியூகங்கள் மாத்திரமே விஞ்சிக் கிடக்கின்றன.

இந்தக் கட்சிகள் 2009 க்குப் பின்னரான சூழலில் தனித்தனிக் குழுக்களாகவும் தனி நபர்களாகவும் பிரிந்து நிற்பதன் பின்னணி என்ன?

வல்லாதிக்கச் சக்திகளின் பிரித்தாளும் தந்திரங்களுக்குள் உட்பட்டமைக்கான உள் நோக்கம் என்ன? ஒவ்வொரு தமிழ்த்தேசியக் கட்சிகளின் உறுப்பினர்களும் தத்தமது தலைமைக்குத் தெரியாமல் அல்லது தத்தமது கட்சிகளின் மத்திய குழுக் கூட்டங்களில் தீர்மானம் எடுக்காமல் அல்லது குறைந்தபட்சம் உரையாடாமல் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதுவர்களைத் தனியாகச் சந்திப்பதற்குரிய காரண காரியம் என்ன?

'தமிழ்த்தேசியம்' என்பதைக் கருப்பொருளாகக் கொண்டு தனிநபர் முயற்சியுடன் சில புலம்பெயர் அமைப்புகளின் விருப்பங்கள் தேவைகளுக்கு ஏற்பச் செயற்பட்டு பிரபல்யம் அடைவது மாத்திரமே இங்கு முதன்மை நோக்கமாகிறது.

இதன் மூலம் தத்தமது செல்வாக்குகளை அதிகரித்து. இலங்கை ஒற்றையாட்சி அரசின் நாடாளுமன்ற ஆசனத்தைக் கைப்பற்றும் தனிப்பட்ட உத்தி என்ற வியூகங்களைத் தவிர ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை என்ற ஒட்டுமொத்தச் சிந்தனை எவரிடமும் இருப்பதாகத் தெரியவில்லை. வெவ்வேறு கட்சிகளாக இயங்கினாலும்,தமிழர் விவகாரத்தைக் கையாள பொதுப் பொறிமுறை ஒன்றை அமைத்து ஒருமித்த குரலில் செயற்பட வேண்டுமென இந்தப் பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் ஆலோசனைகள் பரிந்துரைக்கப்பட்டிருந்தன.

வேறு சில அரசியல் பத்தி எழுத்தாளர்கள் மற்றும் தமிழ்ப் புத்திஜீவிகள் எனப் பலரும், தமிழ்க்கட்சிகள் ஒருமித்த குரலில் செயற்பட வேண்டுமென வலியுறுத்தியுமுள்ளனர்.

'வடக்கு-கிழக்கு அரசியல் சிவில் புலம்பெயர் அமைப்பு' என்ற பெயரில் சென்ற வாரம் புதுடில்லிக்குச் சென்ற குழு ஒன்று அங்கு பல சந்திப்புகளில் ஈடுபட்டுள்ளது.

இந்தக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி. சிறீதரன், க.வி.விக்னேஸ்வரன்,நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர்.இவர்களுடன் அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸின் தலைவர் கிருஸ்ணபிள்ளை இளங்கோ,அமெரிக்க தமிழர் ஐக்கிய அரசியல் செயற்குழுவின் செயலாளர் கலாநிதி தமோதரம்பிள்ளை சிவராஜ், அமெரிக்கத் தமிழ்ச் செயற்குழுவின் செயலாளர் சுந்தர் குப்புசுவாமி, உலக சமூக சேவை மையத்தின் அறங்காவலர் ஆர்.சி.கதிரவன் ,ஏற்கனவே சிவில் சமூக அமைப்பாக இயங்கி வரும் துரைசாமி, வேலன் சுவாமிகள் ஆகியோரும் பங்குபற்றியதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது.

சிறீதரன் இந்தக் குழுவுடன் புதுடில்லிக்குச் சென்றமை தமிழரசுக் கட்சியின் தலைமைக்குத் தெரிந்திருந்ததா? தமிழர்களின் விவகாரம் பற்றிப் பேசப்போகிறார் என்றால் கட்சியின் மத்திய குழுவில் அல்லது கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜாவுடன் அவர் கலந்துரையாடினாரா? அல்லது சிறீதரனைத்தான் இந்தச் சந்திப்புக்கு அனுப்புவது என்று தமிழரசுக் கட்சியின் மத்திய குழு தீர்மானம் எடுத்ததா?

அதேபோன்று விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் கூட்டணியின் பிரதிநிதிகளுடன் புதுடில்லிக்குச் செல்வது பற்றிக் கலந்துரையாடினாரா? வேறு எவரிடமாவது ஆலோசனை பெற்றாரா?

அல்லது டில்லிக்குச் செல்வதற்கு முன்னர் இந்தக் குழுவில் அங்கம் வகித்த அனைத்துப் பிரதிநிதிகளும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் தமிழ்ப் பிரமுகர்கள் எவருடனும் கலந்துரையாடினரா?

எந்த அடிப்படையில் டில்லியில் பேசுவது? அரசியல் தீர்வாக முன்வைக்க வேண்டிய பிரதான கருப்பொருள் என்ன? என்று ஏதேனும் முன்கூட்டிய ஒழுங்குபடுத்தல்கள், தயாரிப்புகள் இருந்ததா? 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரவும், மாகாணசபைத் தேர்தல்களை நடத்துமாறு வலியுறுத்தவும் ஏன் டில்லிக்குப் போக வேண்டும்?

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை இரண்டு அரசுகளும் தத்தமது தேவைக்கு ஏற்ப 2009 க்குப் பின்னர் அவ்வப்போது மிக இரகசியமாகப் பயன்படுத்தி வரும் நிலையில், அந்த ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோர இவர்கள் யார் என்று புதுடில்லி தன் மனதுக்குள் கிண்டலாகக் கேட்டிருக்கும் அல்லவா?

ஆகவே எண்பது வருட அரசியல் போராட்டத்துக்கான தீர்வு பற்றிய கூட்டுத் தயாரிப்புகள் எதுவுமே இல்லாமல் ஆங்காங்கே குறிப்பிட்ட சில நாடாளுமன்ற உறுப்பினர்களையும்,நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் சிலரையும், வேறு சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளையும் தனித்தனியாக அழைத்துக் கொண்டு புதுடில்லிக்குச் சென்றமை நேர்மையான தமிழ்த் தேசிய நிகழ்ச்சி நிரலா?

இந்த வருடம் ஜனவரி மாதம் ஜனநாயகப் போராளிகள் கட்சியும் மற்றும் சில புலம்பெயர் அமைப்புகளின் பிரதிநிதிகளும் டில்லிக்குச் சென்று ஈழத்தமிழர் விவகாரம் தொடர்பான மாநாடு ஒன்றை நடத்தியிருந்தனர். அந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள், பேசப்பட்ட விடயங்கள் பற்றிய தொடர்ச்சி என்ன? வெறுமனே ஒரு மாநாட்டோடு மாத்திரம் அந்த நிகழ்ச்சி முடிவடைந்துவிட்டதா?

அல்லது இந்த மாநாட்டின் தொடர்ச்சியாகத்தான் சென்றவாரம் புதுடில்லியில் சிறீதரன்,விக்னேஸ்வரன் குழுவினர் இந்திய அதிகாரிகளைச் சந்தித்தனரா?

13 ஆவது திருத்தத்தை ஆரம்பப் புள்ளியாக ஏற்று அதனை நடைமுறைப்படுத்துமாறு கோரி கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஆறு தமிழ்த்தேசியக் கட்சிகள் மோடிக்குக் கடிதம் எழுதியிருந்தன. மோடிக்குக் கடிதம் எழுதும் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது சட்டத்தரணிகளான சுமந்திரன் கனகஈஸ்வரன் உள்ளிட்ட குழுவினர் அமெரிக்காவுக்குச் சென்று பேச்சு நடத்தியிருந்தனர்.மீண்டும் கொழும்புக்குத் திரும்பிய சுமந்திரன், "மோடிக்குக் கடிதம்" எழுதும் கூட்டத்தில் பங்குபற்றியிருந்தார். புதிய விடயங்களைக் கடிதத்தில் புகுத்தினார். ஆனால் அந்தக் கடிதத்துக்கு இன்றுவரையும் கிடைத்த பதில் என்ன? அதன் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட அரசியல் வேலைத் திட்டம் என்ன?

2021ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 'வட்டுக்கோட்டைத் தீர்மானம் இரண்டு' என்று மாநாடு சென்னையில் இடம்பெற்றது. பழநெடுமாறன், காசி ஆனந்தன் மற்றும் தமிழகத்தின் பிரபல தமிழ்த்துறை சார்ந்த பேராசிரியர்கள், வல்லுநர்கள் பலரும் பங்குபற்றினர். சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்குமாறு கோரி மோடிக்குக் கடிதமும் அனுப்பியிருந்தனர்.

ஆகவே இந்த மாநாட்டு முடிவின் தொடர்ச்சியாகவே புதுடில்லியில் மேற்படி சந்திப்புகள் இடம்பெற்றனவா? அல்லது இவை ஒவ்வொன்றும் வெவ்வேறுபட்ட தனித்தனி நிகழ்ச்சி நிரல்களா? ஆனால் ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை பற்றிய பேச்சு என்பது ஒற்றை வார்த்தையில் உள்ளதே!

அதாவது 1958 இல் இருந்து 2009 மே மாதம் வரையும் அதன் பின்னரான பௌத்த மயமாக்கல், காணி அபகரிப்புகள் போன்ற தொடர்ச்சிகளைப் பிரதானப்படுத்தி 'இன அழிப்பு' என்பதற்கான சர்வதேச விசாரணையை ஒற்றை வார்த்தையில் ஒருமித்த குரலாக வற்புறுத்தினால் சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரம் இயல்பாக வெளிப்படும்.

ஆனால் இவை பற்றிய பேச்சுகள் கைவிடப்பட்டுள்ளன. குறைந்த பட்சம் ஜெனிவா மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்துக்கு ஏற்ப சர்வதேச கலப்புமுறைப் போர்க்குற்ற விசாரணைக்குரிய அழுத்தங்களைக் கூட ஒருமித்த குரலில் தமிழ்த் தேசியக் கட்சிகள் தொடராக வலியுறுத்தத் தவறியுள்ளன.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியும் நாடாளுமன்ற ஆசனங்களை அதிகரிக்கும் வியூகங்களில் மாத்திரமே கவனம் செலுத்துகின்றது.

ஆகவே குறைந்த பட்சம் கட்சி அரசியலுக்குரிய பண்புகள்கூட இல்லாத நிலையில் கூட்டுச் செயற்பாடுகளை தமிழ்த்தேசியக் கட்சிகளிடம் மக்கள் எதிர்பார்க்கவேமுடியாது என்பது இங்கே பட்டவர்த்தனமாகிறது. இந்தப் பலவீனங்களை மதிப்பீடு செய்தே சில குழுக்கள் தமிழ்த்தேசியக் கட்சிகளையும் சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப்படும் சிலரையும் நன்கு திட்டமிட்டுப் பிரித்தாளுகின்றன.

இந்தப் பின்னணியிலேதான் புதுடில்லியில் அவ்வப்போது இடம்பெறும் தனித்தனிச் சந்திப்புகளையும் மாநாடுகளையும் அவதானிக்கவேண்டும். துவாரகாவின் பெயரில் வெளியான போலி மாவீரர் உரை பற்றிய பரபரப்புகளும் இந்தப் பலவீனங்களை மையமாகக் கொண்டே தயாரிக்கப்பட்டிருப்பதையும் நோக்கலாம்.

ஆகவே 'தமிழ்த்தேசியக் கோட்பாடு' என்பதை 'சிதைப்பது' 'திசை திருப்புவது' என்ற நச்சுத் திட்டங்கள் மாத்திரமே. 2009 க்குப் பின்னரான சூழலில் பல வடிவங்களில் தொடர்ச்சியாக அரங்கேற்றப்படுகின்றன. இந்த நிலையில் 'இலங்கை அரசு' என்ற கட்டமைப்பைத் திருப்திப்படுத்தி, தனது புவிசார் அரசியல் பொருளாதார நலன்களுக்கு ஏற்ப இந்திய மத்திய அரசு இயங்கி வருகிறது. தமிழர்களின் கூட்டுப் பொறுப்பற்ற அரசியல் செயற்பாடுகளை இந்தியா தனக்கேற்ற முறையில் நன்கு பயன்படுத்தியும் வருகின்றது.

இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் வல்லரசாக மாறத் துடிக்கும் இந்தியா, தன்னிலை சார்ந்துதான் செயற்படும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆகவே இந்தியாவைத் தமக்கேற்ற முறையில் கையாள வேண்டியது தமிழ்த்தரப்பின் கூட்டுப் பொறுப்பு. 1987 இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் போதும், 2009 போரின் போதும் சிங்கள அரசியல் தலைவர்கள் இந்தியாவைத் தமக்கு ஏற்ற முறையில் கையாண்டனர். 2009 மே மாதத்தின் பின்னரான கடந்த 14 வருடங்களிலும் சிங்கள ஆட்சியாளர்கள் இந்தியாவை ஈழத்தமிழர் பக்கம் சென்றுவிடாமல் காய் நகர்த்துகின்றனர்.

டில்லியைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியமை பற்றி மஹிந்த ராஜபக்சவின் முன்னாள் செயலாளர் லலித் வீரதுங்க நேர்காணல் ஒன்றில் கூறியமை பற்றி இந்தப் பத்தியில் ஏலவே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்யவேண்டும் எனக் கூறிய மிலிந்த மொறகொட அமைச்சவை அந்தஸ்துடன் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராகப் பதவி வகிக்கிறார்.

தமிழ் நாட்டையும் புதுடில்லியின் நிலைப்பாட்டுக்கு ஏற்ப மாற்றியமைக்கும் பல அரசியல் வேலைகளில் மிலிந்த மொறகொட ஈடுபடுகிறார் என்பதை டில்லியில் சந்திப்பு நடத்திய பிரதிநிதிகள் புரிந்துகொள்ளவில்லை என்பதுதான் வேடிக்கை.

புரிந்திருந்தால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துமாறும் 'பதின்மூன்றுக்கு 'ஏற்ப மாகாணசபைத் தேர்தல்களை நடத்துமாறும் புதுடில்லிச் சந்திப்புகளில் இவர்கள் கோரியிருக்க மாட்டார்கள்.

டில்லியில் நடந்த பல சந்திப்புகளிலும் பிரதமர் மோடியை அல்லது வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரைச் சந்திக்க எவருக்குமே அனுமதி வழங்கப்படவில்லை. ஆகவே மூன்றாம் தரச் சந்திப்புகள்தான் (ThirdClass Encounter) இவை. இந்தச் சந்திப்புகள் பா.ஜ.க. முகவர்கள் ஊடாக ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்பதும் பகிரங்கமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டிமணி, ஜெகன், ஞானவேல்

## வழக்கு 1982 - 1983



## 2

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் முதல் வழக்கு

கே.வி.தவராசா

### குட்டிமணியின் இறுதி விருப்பம்

"நான் எந்தக் குற்றமும் புரிந்த குற்றவாளியல்ல. நான் ஒரு குற்றமற்ற மனிதன். நான் பொலிஸாரினாலும் இராணுவத்தினராலும் கைது செய்யப்பட்டு. இந்த வழக்கில் சாட்சியமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வாக்குமூலத்தில் கைச்சாத்திடுமாறு சித்திரவதையின் மூலம் நிர்ப்பந்திக் கப்பட்டேன். அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நான் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்படுகிறேன். இந்த நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட ஆணை தொடர்பாக, நான் எனது ஒரு சில அடிப்படைக் கருத்துகளைக் கூற விரும்புகிறேன். இந்த வழக்கில் இன்று வழங்கப்படும் இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு தமிழீழத்தை ஸ்தாபிப்பதற்கான புதியதோர் உத்வேகத்தை, வளமான உரத்தை, ஊக்கத்தை, உந்துதலளிக்கும் காரணத்தை வழங்கும். இதுதான் ஒரேயொரு வழக்காக இருக்காது. பொய்யான குற்றச்சாட்டுகளின் பேரில் இந்த நீதிமன்றத்தின் முன்னே இன்னும் பல தமிழ் இளைஞர்கள் கொண்டுவரப்படுவார்கள். இது தொடருகின்றபோது, வழங்கப்படும் தண்டனை தமிழரின் விடுதலைக்கு உற்சாகமளிக்கும். நான் தமிழீழத்தில் தூக்கிலிடப்படவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். எனது முக்கியமான உறுப்புகள் அவை தேவைப்படுபவர்களுக்கு வழங்கப்படவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

எனது கண்கள் கண்பார்வையற்ற ஒருவருக்கு வழங்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அந்தக்கண்களினால் என்றோ ஒரு நாள் நான் தமிழீழத்தைக் காணக் கூடியதாக இருக்கும். எனது உடல் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பீடத்துக்கு வழங்கப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இத்தோடு எல்லாம் முடிந்து விடப் போவதில்லை. என்னைத் தூக்கிலிடுவதன் மூலம் பல்லாயிரக்கணக்கான குட்டிமணிகள் உருவாவார்கள்"

### பிரிவோம் சந்திப்போம்

மரண தண்டனை விதிக்கப்பட்டதும் கைவிலங்குகள் மாட்டப்பட்ட நிலையில் நீதிமன்றுக்கு வெளியே அவர்கள் கொண்டு வரப்பட்டனர். விலங்கிடப்பட்ட உயர்த்திய கைகளினால் குட்டிமணி கூட்டத்தினருக்குக் கையசைத்தார். அவரது வலது பக்கத்தில் ஜெகன் நின்றி ருந்தார். விடுவிக்கப்பட்டு பின்னர் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்ட ஞானவேலு அவரது இடது பக்கத்தில் நின்றார். அங்கு நின்று கொண்டிருந்த ஊடகவியலாளர்களையும் மக்களையும் பார்த்து இறுதியாகக் குட்டிமணி கூறிய வசனம் "பிரிவோம் சந்திப்போம்" என்பதே.




மரண தண்டனைத் தீர்ப்பையடுத்து குட்டிமணி தண்டனை நிறைவேற்றத்துக்காகக் காத்திருப்பதற்கென வெலிக்கடை அதிஉயர் பாதுகாப்புச் சிறைக்கு அனுப்பப்பட்டார். அங்கு சிங்கள மற்றும் தமிழ்க் கைதிகள் என்ற இரு சாராரும் இருந்தனர். கொலை, கற்பழிப்பு, கொள்ளை முதலிய குற்றங்களுக்காகத் தண்டனை பெற்ற கைதிகளுக்கு மத்தியில் இனத்தின் சுதந்திரத்துக்குக் குரல் கொடுத்த சுதந்திரப் போராளிகளாக அவர்கள் இருவரும் திகழ்ந்தார்கள். இன ரீதியான மோதல்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக சிங்கள, தமிழ்க் கைதிகள் வெவ்வேறாகத் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

1981-1982 கால கட்டத்தில் குட்டிமணியென்றால் தெரியாதவர்களே கிடையாத அளவுக்கு மிகவும் பிரபல்யமாகி இருந்தார். இதனால் வழக்கு விசாரணையைப் பார்ப்பதற்காக நீதிமன்றம் வந்தவர்களை விட வசீகரத் தோற்றமுள்ள குட்டிமணியை பார்ப்பதற்காக வந்த பார்வையாளர்களே மேல்நீதிமன்றில் அதிகம். அதிகளவு பல்கலைக்கழக மாணவ மாணவிகள் ஏராளமான பொதுமக்கள், உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர்கள் என மேல்நீதிமன்று நிரம்பி மக்களால் வழிந்தது.

"1981ஆம் ஆண்டு ஐரிஸ் குடியரசு அமைப்பின் போராளிகள் சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினர்.

இந்தப் போராட்டத்தை சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்வதற்காக, உண்ணாவிரதப் போராளியான பொபி சாண்ட் (Bobby sands) நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப் பட்டார். அதைப் போன்று மரணதண்டனை விதிக்கப்பட்ட செல்வராஜா யோகச்சந்திரனை (குட்டிமணி) ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக நியமித்தால் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தையும், சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டு போகமுடியும். எனவே குட்டிமணியை நாடாளுமன்ற உறுப்பினராக நியமிப்பது தான் இந்தச்சந்தர்ப்பத்தில் முக்கியமானது" என்று சட்டத்தரணி நவரட்ணம் உறுதிபடச் சொன்னது அனைவருக்கும் சரியாகவே பட்டது. அதனைத் தொடர்ந்து


குட்டிமணி

குட்டிமணி நாடாளுமன்ற உறுப்பினராக தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியால் நியமிக்கப்பட்டார். ஆனால் நாடாளுமன்ற உறுப்பினராக குட்டிமணி சத்தியப் பிரமாணம் செய்துகொள்வதற்காக அவரைச் சிறையிலிருந்து ஒருபோதும் விடுவிக்கப்போவதில்லை என்று சிறைச்சாலை ஆணையாளர் பிரய தெல்கொட அறிவித்தார். ஆயினும் மூன்று மாதங்களுக்குள் சத்தியப் பிரமாணம் செய்யமுடியாத நிலையில் அந்தப்பதவி காலாவதியாவதற்கு ஒருநாள் முன்னதாக குட்டிமணி தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினமாச் செய்தார்.

இதற்கிடையே குட்டிமணி மரணதண்டனை விதிக்கப்பட்டவர் என்பதால் அவரது நியமனம் செல்லாது என அரசாங்கம் அறிவித்தது. அதனைத் தொடர்ந்து சட்டத்தரணி நவரட்ணம் தவிர்க்கப்பட்டு அந்தவெற்றிடத்துக்கு நீலன் திருச்செல்வம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

மிக உயர்ந்த மனிதர் சட்டத்தரணி நவரட்ணம், அவர் என்றும் தமிழர் அரசியலில் முன்மாதிரிதான்.

### ஜெகனின் இறுதி விருப்பம்

"நான் குற்றமற்றவன். இராணுவம்,சி.ஐ.டி.,பொலிஸ் ஆகியோர் என்னைச் சித்திரவதைப்படுத்தி ஏதோ சில ஆவணங்களில் எனது கையொப்பத்தைப் பெற்று, அவ்வாவணங்களை எனது வாக்குமூலமாகப் பொய்யாக இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர். இந்தப் பொய்யான சாட்சியங்களின் அடிப்படையில் நான் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளேன். நான் தூக்கிலிடப்படலாம். எனினும் தமிழீழம் மலர்வதை யாரும் தடுக்கமுடியாது. சுதந்திரம் எனது பிறப்புரிமை. இந்த உரிமை எனக்கு மறுக்கப்பட்டுள்ளது. எனக்கு இந்த உரிமை கிடைக்காவிடினும், என்னைப் பின்தொடர்ந்து வரும் தமிழ் இளைஞர்கள் சுதந்திரத்துக்கான இந்த உரிமையைக் கொண்டிருப்பார்கள். யாரிடமிருந்தும் எந்தக் கருணையையும் நான் கேட்கவில்லை. இம்மரண தண்டனை எவ்வித காரணமோ அல்லது நீதியோ இன்றி என்மீது விதிக்கப்பட்டுள்ளது. நான் தமிழீழத்தில் தூக்கிலிடப்பட்டு, எனது உடல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்துக்கு வழங்கப்படவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். எனது கண்கள் கண்பார்வையற்ற ஒருவருக்கு வழங்கப்படவேண்டும். தமிழீழம் மலரட்டும். நீடூழி வாழ்க தமிழீழம்."


### தனக்கு வந்த பதவியை குட்டிமணிக்கு கொடுத்த சட்டத்தரணி நவரட்ணம் ( கரிகாலன்)

குட்டிமணி சிறையிலிருக்கும் பொழுது 1982 ஓகஸ்ட் 1 ஆம் திகதி அப்போதைய தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் வட்டுக்கோட்டைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் வ.திருநாவுக்கரசு இறந்ததால், சட்டத்தரணி நவரட்ணத்தை (கரிகாலன்) தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைமைத்துவம், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஏற்கும்படி வேண்டிக் கொண்டது. ஆனால் தனக்குக் கிடைத்த எம்.பி.பதவியை ஏற்க மறுத்த சட்டத்தரணி நவரட்ணம், அந்தப்பதவிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்ட குட்டிமணியை நியமிக்கும்படி தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைமைத்துவத்திடம் வேண்டுகோளை முன்வைத்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிறிய,சிந்தனைத்திறன்மிக்க,அர்ப்பணிப்புமிக்க பிரஜைகள் உலகை மாற்றமுடியும் என்பதை எப்பொழுதுமே சந்தேகிக்கக்கூடாது.மெய்யாகவே,அது ஒன்றுதான் உலகில் எப்பொழுதும் நடந்திருக்கிறது.,
- மார்கரட் மீட்



# மீட்பருக்காகக் காத்திருப்பது

நிலாந்தன்

கடந்த புதன்கிழமை, நவம்பர் 29ஆம் திகதி,கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் உள்ள "ஆதாரம்" மண்டபத்தில் நடந்த ஒரு நிகழ்வில்,"கிளிநொச்சி உளநல வலையமைப்பு" என்ற ஓர் அமைப்புத் தொடங்கப்பட்டது. இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த துறைசார் மருத்துவர்களும் இக்கட்டுரையாசிரியரும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

உளநல ஒருங்கிணைப்பு மருத்துவரான ஜெயராஜ் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார்.தனது தலைமை உரையில் அவர் ஆயுத மோதல்களுக்குப் பின்னரான கிளிநொச்சி மாவட்டத்தின் உளவியல் நெருக்கடிகள் குறித்துப் பேசினார். உரையின் ஒரு கட்டத்தில் அவர் சொன்னார் "நான் களைத்து விட்டேன்.அதனால் மேற்படிப்புக்காக சற்று ஓய்வெடுக்கப்போகிறேன்" என்று.

உண்மை.ஆயுத மோதல்களுக்குப் பின்னரான தமிழ்ச்சமூகத்தின் அசாதாரணமான கூட்டு உளவியலைக் கையாள்வதற்குத் தேவையான அளவு மனநிலை மருத்துவநிபுணர்கள் இல்லை. இருக்கின்ற கொஞ்சம் மருத்துவர்களிடமே எல்லாச் சுமைகளும் சுமத்தப்படுகின்றன.

கடைசிக்கட்டப் போரில் அதிகம் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா,மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு நிரந்தர மனநல மருத்துவ நிபுணர்கள் இப்பொழுது இல்லை.யாழ்ப்பாணத்தில் மூன்று மருத்துவ நிபுணர்கள் உண்டு. கிளிநொச்சி, முல்லைத்தீவு இரண்டையும் ஒரு மருத்துவ நிபுணர் தற்காலிகமாகப் பார்க்கிறார். வவுனியாவிலும் அதுதான் நிலைமை. 2009 க்குப் பின், பாதிக்கப்பட்ட தமிழ் மாவட்டங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மனநிலை மருத்துவர் நிபுணர்கள் பொறுப்பாக நியமிக்கப்பட்டார்கள். எனினும் போரின் உளவியல் விளைவுகளைக் கையாள்வது என்ற அடிப்படையில் தமிழ் மாவட்டங்களை ஒருங்கிணைத்த ஒரு மனநல மருத்துவக் கட்டமைப்பு உருவாக்கப்படவில்லை.

அதேசமயம், 2009க்குப் பின்னரான தமிழ்ச்சமூகத்தின் கூட்டு உளவியல் நெருக்கடிகளைக் கையாள்வதற்கு தனியாக மனநல மருத்துவர்களால் மட்டும் முடியாது. ஆஸ்பத்திரிகளால் மட்டும் முடியாது. அது ஒரு கூட்டுப் பிரச்சினை. அது ஒரு சமூகத்தின் கூட்டு உளவியல் சம்பந்தப்பட்ட விடயம்.மருத்துவர்களோடு அரசியல்வாதிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள், சமூகத் தலைவர்கள், சமூகப் பெரியார்கள், மதத் தலைவர்கள்,கருத்துருவாக்கிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் முதலாக பல்வேறு வகைப்பட்ட தரப்பினரும் இணைந்து கூட்டாகச் செயற்பட வேண்டும்.ஒரு கூட்டுச் சிகிச்சையாக,கூட்டுக் குணப்படுத்தலாக அமையவல்ல அரசியல், சமூகப்பொருளாதாரா வழி வரைபடம் ஒன்று வேண்டும்.ஆனால் அவ்வாறான கூட்டச்செயற்பாடு இல்லாத வெற்றிடத்தில் மருத்துவர்களின் தலையில் மொத்தச் சுமையும் சுமத்தப்படுகிறது.

வயதால் மிக இளைய தமிழ் நகரங்களில் ஒன்று கிளிநொச்சி. ஒரு குடியேற்ற நகரம் என்ற அடிப்படையில் வயதால் இளைய ஒரு நடுத்தர வர்க்கத்தைக் கொண்டிருக்கிறது. இரணைமடுப் பெருங்குளத்தை மையமாகக் கொண்ட குடியேற்றங்களின் மூலம் கட்டியெழுப்பப்பட்ட ஒரு நகரம். ஆயுத மோதல்களுக்கு முந்திய காலகட்டத்தில் அந்நகரத்தைக் கட்டியெழுப்பியவர்களில் ஆனந்தசங்கரி குறிப்பிடத்தக்கவர்.அதுபோல ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் எல்லா ஆயுதப் போராட்ட இயக்கங்களும் அதைக் கட்டியெழுப்பின.குறிப்பாக மூன்றாங்கட்ட ஈழப்போரின் விளைவாக கிளிநொச்சி சமாதானத்தின் தலைநகரமாக மேலெழுந்தது. அது சமாதானத்தின் காட்சி அறையாகவும் பிரகாசித்தது. ஆனால் நாலாங்கட்ட ஈழப்போர் வெடித்தபோது அது ஒரு பேய் நகரமாக மாறியது.

ஏனைய தமிழ் நகரங்களோடு ஒப்பிடுகையில் அதிக சேதமடைந்த ஒரு நகரமும் அது. ஆயுத மோதல்களுக்குப் பின்னரான கூட்டுக்காயங்கள்கூட்டு மனவடுக்கள், கூட்டு அவமானங்கள்... போன்றவற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு நகரம். கூட்டுத் தண்டனைக்குள்ளாகிய ஒரு நகரம். அந்த நகரத்தை,மாவட்டத்தை 2009க்குப்பின் சிறீதரனும் சந்திரகுமாரும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியில் உள்ள அமைப்புகளும் தனிநபர்களும் கட்டியெழுப்பினார்கள். சிறீதரனும் சந்திரகுமாரும் இருவேறு அரசியல் நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தவர்கள்.ஒருவர் உரிமை மைய அரசியல்.மற்றவர் அபிவிருத்தி மைய அரசியல்.இந்த இரண்டு அரசியல்வாதிகளுக்கும் இடையிலான அரசியல் முரண்பாடு கிளிநொச்சியின் 2009க்குப் பின்னரான அரசியற் சூழலை பெரிதும் தீர்மானித்தது.அடுத்த ஜனவரி மாதம் தமிழரசுக் கட்சியின் தலைமையைத் தீர்மானிப்பதற்கான ஒரு தேர்தல் நடக்கக்கூடும். அப்படி நடந்தால், சிறீதரன் ஒரு போட்டியாளர். ஆயுத மோதல்களுக்குப் பின்னரான தமிழ் அரசியலில் கிளிநொச்சிக்குரிய முக்கியத்துவத்தை இது காட்டுகின்றது. கிளிநொச்சி உட்பட, போரால் அதிகம் பாதிக்கப்பட்ட தமிழ் மாவட்டங்களின் மீது அதிகரித்த கவனக்குவிப்பு இருந்திருக்க வேண்டும்.அந்த மாவட்டங்களைக் கட்டியெழுப்புவதற்கான கூட்டுச்சிகிச்சையாக அமையவல்ல கூட்டுச் சமூக, அரசியல்,பொருளாதாரத் திட்டங்களை வகுத்திருந்திருக்கவேண்டும். வடமாகாணசபை உருவாக்கப்பட்டபோது அதைக் குறித்து மேலும் ஆழமாகச் சிந்தித்திருக்க வேண்டும்.ஆனால் அது நடக்கவில்லை.ஆயுத மோதல்களுக்குப் பின்னரான கடந்த 14 ஆண்டுகளிலும் தமிழ்மக்கள் அரசியல் ரீதியாக பொருளாதார ரீதியாக உளவியல் ரீதியாக முழுமையாகக் குடியமராத (unsettled) ஒரு நிலைமைதான் காணப்படுகின்றது.சமூகத்தின் பெரும் பகுதி இப்பொழுதும் கொந்தளிப்பான ஓர் உளவியல் சூழலுக்குள்தான் காணப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு மூத்த மனநல மருத்துவர் சிவதாஸ் கூறுவதுபோல,சமூகம் இப்பொழுதும் தப்பிப்பிழைக்கும் வழியைத்தான் (Survival mode) தேடுகின்றது..

2009க்குப் பின்னரான புனர்வாழ்வு பெற்ற போராளிகள், உறுப்புகளை இழந்த போராளிகள், போர் விதவைகள், முதியோர், போர் அனாதைகள், மாவீரர் குடும்பங்கள் உள்ளிட்ட பல தரப்பட்டவர்களுக்கும் கூட்டுச்சிகிச்சை தேவைப்படுகின்றது. கூட்டுக் குணமாக்கல் தேவைப்படுகிறது.தமிழ்ச்சமூகம் இப்பொழுதும் கொந்தளிப்பான ஒரு மனநிலையோடு காணப்படுகிறது. அதைப் பின்வரும் காரணங்கள் தீர்மானிக்கின்றன.

முதலாவது, அரசியல்ரீதியாக நிலைமாற்றம் ஏற்படாமை. அதாவது ஒடுக்குமுறையின் விளைவாகத் தோன்றிய ஆயுதப் போராட்டந்தான் நசுக்கப்பட்டிருக்கிறது.போருக்கு மூல காரணமான இன ஒடுக்குமுறை தொடர்ந்து நீடிக்கின்றது. அது ஆயுத ரீதியாக தோற்கடிக்கப்பட்ட மக்களை அரசியல் ரீதியாகவும் தோற்கடிக்கும் நிகழ்ச்சிநிரலோடு காணப்படுகின்றது.

இரண்டாவதாக, மேற்படி நிகழ்ச்சி நிரலை எதிர்கொண்டு.ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னரான ஒரு புதிய மிதவாத அரசியலுக்கு.ஒரு புதிய பண்புருமாற்ற அரசியலுக்குத் தலைமை தாங்கவல்ல தலைமைகள் தமிழ்மக்கள் மத்தியில் இல்லை என்ற வெற்றிடம்.

மூன்றாவது, புலம்பெயர்ந்து வாழும் நிதிப்பலம்மிக்க தமிழர்கள் தாயக அரசியலின் மீது தலையீடு செய்கிறார்கள். அவர்கள் கள யதார்த்தத்திற்கு வெளியே இருந்தபடி, பிரிவேக்கத்தோடு தாயக அரசியலின் மீது ஏதோ ஒரு விதத்தில் தலையீடு செய்ய முயற்சிக்கிறார்கள். அவர்களுடைய நிதி அதிகாரம் நல்லதையும் செய்கின்றது. கெட்டதையும் செய்கின்றது.

நாலாவது, உலகளாவிய தொழில்நுட்ப மாற்றமானது ஒருபுறம் தமிழ் மக்களை இணைய வலையில் பிணைக்கின்றது. இன்னொருபுறம் அது தமிழ் மக்களைச் சிதறடிக்கின்றது. ஒரு தாங்க முடியாத தோல்விக்குப் பின், கடந்த 14 ஆண்டுகளாக கொத்தளித்துக் கொண்டிருக்கும் கூட்டு உளவியலின் விளைவாக, தமிழ் மக்கள் இணைய வெளியில் தங்களுடைய கண்களைத் தாங்களே தோண்டுகிறார்கள்.தங்களுடைய கழுத்தைத் தாங்களே அறுக்கிறார்கள். தங்களுடைய புனிதங்களின் மீது தாங்களே மலத்தைப் பூசுகிறார்கள்.

இறந்த காலத்தில் கல்வியைத் துறந்து சுகபோகங்களைத் துறந்து போராடி,கண்ணை,கையை,காலை, இழந்தவரெல்லாம் ஓரமாகநின்று அமைதியாகப் பார்த்துக்கொண்டிருக்க,பாதுகாப்பான இறந்த காலத்தை பெற்றவரெல்லாம் நிகழ்காலத்தின் பேச்சாளர்களாக மினுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.அவர்கள் மற்றவர்களை நோக்கிச் சூழ்ச்சிக் கோட்பாடுகளைப் புனைகிறார்கள்.

ஐந்தாவது காரணம், ஆயுதப் போராட்டத்திற்கு முன்பு தமிழ்ச்சமூகத்தில் இயல்பான சமூகப்,பொருளாதார,அரசியல் கட்டமைப்புகள் இருந்தன.ஆயுதப் போராட்டம் புதிய கட்டமைப்புகளையும் புதிய விழுமியங்களையும் புதிய பண்பாட்டையும் கொண்டு வந்தது. ஏற்கனவே இருந்த பலவற்றை நீக்கியது. ஆனால் அது தோற்கடிக்கப்பட்ட போது அது கொண்டு வந்த புதிய கட்டமைப்புகளும் சிதைந்து விட்டன.அதற்கு முன் இருந்த சமூகக் கட்டமைப்புகளும் சிதைந்து போய்விட்டன.அதனால் கடந்த 14 ஆண்டுகளாக நிறுவன உருவாக்கிகளும் அமைப்புருவாக்கிகளும் அதிகரித்த அளவில் தேவைப்படுகிறார்கள்.

மேற்கண்ட பிரதான காரணங்களின் தொகுக்கப்பட்ட விளைவாக, ஈழத்தமிழ் கூட்டு உளவியலானது,பண்புரு மாற்றத்துக்குத் தேவையான ஆளுமைகள் இல்லாத வெற்றிடத்தில், அதற்கு வேண்டிய கட்டமைப்புகள் இல்லாத வெற்றிடத்தில்,தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்த வெற்றிடத்தில் ஐ.நா. தீர்வைத்தரும்; இந்தியா தீர்வைத்தரும் என்று காத்திருக்கும் ஒரு போக்கு தொடர்ந்து காணப்படுகின்றது.ஒரு தலைவரின் வருகைக்காக; ஒரு மீட்பரின் வருகைக்காகக்,காத்திருக்கும் ஒரு சமூகமாக, ஈழத்தமிழர்களைச் சுருக்கியதில், 2009க்குப் பின்னரான தமிழ் மிதவாதிகளுக்குப் பெரிய பொறுப்பு உண்டு.

இப்படிப்பட்டதோர் அமைதியுறாத,கொந்தளிப்பான,காத்திருக்கின்ற கூட்டு உளவியலைத்தான் வெளிச்சக்திகள் வெவ்வேறு வடிவங்களில் கையாளப் பார்க்கின்றன.விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவருடைய மகள் வருகிறார் என்ற அறிவிப்பும் எதிர்பார்ப்பும் இந்தப் பின்னணிக் குள்தான் நிகழ்ந்தது.ஒரு மீட்பருக்காக காத்திருக்கும் ஒரு நிலை உள்ளவரை, தங்களுக்குள் தீர்க்கதரிசனமும் அர்ப்பணிப்பும் மிக்க தலைமைகளைக் கட்டி எழுப்பமுடியாத வரை; திரும்பப்பெறமுடியாத இறந்த காலத்தை "மம்மியாக்கம்" செய்து காவும் வரை;இறந்த காலத்தில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளாத வரை; அரசியலை அறிவியலாக விளங்கிக் கொள்ளாதவரை; இந்த நிலைமை தொடர்ந்துமிருக்கும்

துவாரகாவைக் கொண்டு வருவது எனப்படுவது ஏற்கனவே கடந்த 14 ஆண்டுகளாக இருந்து வரும் ஓர் அரசியல் போக்கின் தொடர்ச்சிதான். தலைமையை அல்லது தகைமையை வெளியே தேடுவது.சம்பந்தரும் அதைத்தான் செய்தார்.முதலில் சுமந்திரனை உள்ளே கொண்டுவந்தார். அதன் பின் விக்னேஸ்வரனைக் கொண்டுவந்தார்.அதன்பின் தன் சொந்த மாவட்டத்துக்குக் குகதாசனைக் கொண்டு வந்தார்.பட்டப் படிப்புகள் இல்லாத போராட்டத் தலைமைகள் தமிழ் - சிங்கள உறவுகளை பகை நிலைக்குத் தள்ளி விட்டன என்று அவர் நம்பினார். எனவே மெத்தப் படித்த, சட்டப் பின்னணியைக் கொண்ட,புதியவர்களை கட்சிக்குள் இறக்கி,சிங்கள மக்களுக்கு நம்பிக்கையூட்டவேண்டும் என்றும் அவர் சிந்தித்தார்.அந்த அடிப்படையில் கட்சியை முதலில் புலி நீக்கம் செய்தார். அதன் பின் ஆயுதப் போராட்ட நீக்கம் செய்தார்.அதற்கு வேண்டிய ஆட்களைக் கட்சிக்குள் கொண்டு வந்தார்.ஆனால் அவருடைய சொந்தக் கட்சியே இப்பொழுது இரண்டாக உடையும் நிலை. அவருடைய சொந்த மாவட்டத்திலேயே ஆசனத்தை இழக்கும் ஆபத்து. சம்பந்தரின் அரசியல் வழியானது அவருடைய வாரிசுகளே அவரைத் தூக்கி எறியும் ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. அந்த அரசியலின் தோல்விதான் கடந்த 14 ஆண்டு கால காத்திருப்பு அரசியலும். ஒரு மீட்பரின் வருகைக்காக காத்திருப்பது.அவ்வாறு ஒரு மீட்பரின் வருகைக்காக காத்திருக்கும் நிலைமை தொடரும்வரை வெளியில் இருந்து மீட்பர்கள் உற்பத்தி செய்யப்படுவார்கள்.

இந்த நிலைமையை மாற்றுவதென்றால்,தமிழ்மக்கள் மத்தியில் இருந்து பண்புருமாற்றத்திற்குத் தலைமை தாங்கும் ஆளுமைகள் மேற்கிளம்ப வேண்டும். ஆயுத மோதல்களுக்குப் பின்னரான கூட்டுக்காயங்களுக்கும் கூட்டு மனவடுக்களுக்கும் கூட்டுக் கொந்தளிப்புக்கும் கூட்டுச் சிகிச்சையாக அமையத்தக்க கூட்டுச் செயற்பாடுகளுக்குத் தேவையான பொருத்தமான கட்டமைப்புகளை தமிழ்மக்கள் உருவாக்க வேண்டும்.

கடந்த 29 ஆம் திகதி கிளிநொச்சியில் உருவாக்கப்பட்ட உளநல வலையமைப்பு அவ்வாறான கட்டமைப்புகளில் ஒன்றாக வளர்ச்சிபெறவேண்டும். விதவைகளுக்கான கட்டமைப்பு; முதியோருக்கான கட்டமைப்பு; அனாதைச் சிறுவர்களுக்கான கட்டமைப்பு; உறுப்புகளை இழந்தவர்களுக்கான கட்டமைப்பு; போதைப்பொருள் பாவனையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கட்டமைப்பு; நினைவு கூர்தலுக்கான கட்டமைப்பு; கலை பண்பாட்டுக் கட்டமைப்பு; முதலீட்டுக் கட்டமைப்பு; உலகளாவிய ஒரு வங்கி, உலகளாவிய ஒரு தொண்டு நிறுவனம்... போன்ற பல்வேறு கட்டமைப்புகளையும் தமிழ்மக்கள் உருவாக்க வேண்டும். புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் போதிய நிதி உண்டு; வளங்கள் உண்டு.தாயகத்தில் தேவை உண்டு.இரண்டையும் இணைப்பதற்கு அரசியல் தலைமைகளால் முடியவில்லை என்றால், நிறுவன உருவாக்கிகள் அதைச்செய்யலாம். அமைப்பு உருவாக்கிகள் அதைச் செய்யலாம்.

தமிழ் மக்களுக்குத் தேவையாக இருப்பது தொண்டுத் தேசியந்தான். முன்னுதாரணம் மிக்க செயற்பாட்டாளர்கள்;முன்னுதாரணம் மிக்க தொண்டர்கள். ஆயுத மோதல்களுக்குப் பின்னரான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பத் தேவையான பொருத்தமான நிறுவனங்களை புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதி மற்றும் துறைசார் அறிவுப் பங்களிப்புடன் கட்டியெழுப்ப வேண்டும்.அதாவது தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். தேசத்தைக் கட்டியெழுப்பும் அரசியலுக்கு தலைமைதாங்கத் தக்கவர்கள் மேலெழும் பொழுது சமூகம் வெளியாருக்காக காத்திருக்காது.அதிசயங்கள் அற்புதங்களுக்காகக் காத்திருக்காது.மாறாக தானே அதிசயங்களையும் அற்புதங்களையும் பெருஞ் செயல்களையும் செய்யத் தொடங்கிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் கைவண்ணம்



பி. சஞ்ஜேய்
தரம் - 3
யா /கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை




பி. சஞ்ஜேய்
தரம் - 3
யா /கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை



சி.கபிஷன்,
தரம்-07
யா/சாவகச்சேரி
இந்துக் கல்லூரி.



B.லதுர்சன்,
தரம் - 7 H
யாழ்.இந்துக்கல்லூரி.



பா. ஜோயல்.
தரம் - 2.
யாழ்ப்பாணம்.



சு.அபிஷேக்
தரம் - 5
இணுவில் சிவகாமி
அறநெறிப்பாடசாலை



ப.விதுசிகா
தரம் - 3c
யா/கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை

## இலங்கையிலுள்ள மாகாணங்கள்

- வடக்கு மாகாணம்
- கிழக்கு மாகாணம்
- வடமத்திய மாகாணம்
- வடமேல் மாகாணம்
- மத்திய மாகாணம்
- சப்ரகமுவ மாகாணம்
- ஊவா மாகாணம்
- தென் மாகாணம்
- மேல் மாகாணம்

## இலங்கையின் தேசிய சின்னங்கள்

இலங்கையின் தேசிய மரம்
**நாகமரம்**

இலங்கையின் தேசியப் பறவை
**காட்டுக்கோழி**

இலங்கையின் தேசிய மிருகம்
**யானை**

இலங்கையின் தேசிய மலர்
**நீலஅல்லி**







நீங்களும்
உங்கள் கைவண்ணங்கள்,
ஆக்கங்களை அனுப்பலாம்.
அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறம்



உடுவில் அரவிந்தன்

அகிலனைப்பற்றி எனக்கு நல்ல அபிப்பிராயமே இருந்தது. அவன் மக்கள் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டபோது நான் உண்மையில் மகிழ்ச்சியடைந்திருந்தேன் என்றே கூறவேண்டும். அவன் அதற்குத் தகுதியானவன்தான் என்ற எண்ணமும் எழுந்திருந்தது. இன்று அவனுடைய கட்சி அலுவலகத்திலே காத்திருக்கும்போது. பழைய நினைவுகள் புரண்டெழுவதை என்னால் தவிர்க்கமுடியவில்லை.

பக்கத்திலே அமர்ந்திருக்கும் வினோதனைத் திரும்பிப் பார்த்தேன். அவன் தாடையைச் சொறிந்தபடி ஏதோ யோசித்துக்கொண்டிருந்தான். நெருப்புத்துண்டுகளின்மீது நிற்கின்ற பாவனை அவனுடைய முகத்திலே தெரிந்தது. அகிலன் எங்களுடன் பல்கலைக்கழகத்திலே ஒன்றாகப் படித்தவன். படிக்கும்போது தன்னைப்பற்றிய பிரமிப்பை எல்லோரிடமும் ஏற்படுத்தியிருந்தான். அவன் நல்ல நாடக நடிகனாகவும், பெயர்பெற்ற விளையாட்டுவீரனாகவும் இருந்தான். அத்தோடு. எங்கள் கூடைப்பந்தாட்ட அணியின் தலைவனாகவும் செயற்பட்டான்.

ஒவ்வொருநாளும் மாலைவேளையில் அவனை விளையாட்டு மைதானத்திலே காணலாம். தொளதொளப்பான சிவப்புக்காற்சட்டையை அணிந்தபடி மைதானத்தைச்சுற்றி ஓடிக்கொண்டிருப்பான். சிவப்புநிறம் அவனுக்கு மிகவும் பிடித்தமானதென்பதை அறிவேன். அவனது துவிச்சக்கரவண்டிகூடச் சிவப்புநிறத்தில் இருந்தது. 'சிவப்பு மிகவும் கவர்ச்சியானது. எல்லோரையும் ஒருமுறை திரும்பிப்பார்க்க வைக்கக்கூடியது' என்று கூறிக்கொள்வான்.

கைலாசபதி அரங்கின் முன்னாலுள்ள சிமெந்துக்கட்டில் நாங்கள் மூவரும் ஒன்றாக அமர்ந்திருந்து உரையாடுவோம். அகிலன் தன்னுடைய ஊரைப் பற்றியும், அங்குள்ள மக்களுக்கான பொதுஅமைப்பில் இணைந்து இயங்குவது பற்றியும் பெருமையாகப் பேசுவான். சமூகநலன்சார்ந்த அவனுடைய செயற்பாடுகள் ஊருக்குள்ளே பலரை ஈர்த்திருப்பதாகச் சொல்வான். தலைமைத்துவப் பண்புள்ளவனாகத் தன்னைக் காட்டிக்கொள்வதில் அவன் வெற்றியடைந்திருந்தானென்றே கூறவேண்டும்.

ஆனால், வினோதனுடைய போக்கு எப்போதும் வித்தியாசமாக இருக்கும். அவன் பெரும்பாலும் எங்களுடைய உரையாடல்களிலே கலந்துகொள்ளாது அமைதியாக இருப்பான். அப்படியானவன் தீவிரமான விடயங்களில் கடினமான முடிவுகளை எடுப்பதில் ஒருபோதும் தயங்குவதேயில்லை.

என்னுடைய இசைவுகள் பெரும்பாலும் வினோதனைச் சார்ந்தே இருக்கும். சிலவேளைகளில் அவன் பெரிய காரியங்களைத் தனியாக முடித்துவிட்டு ஒன்றுமே அறியாதவன்போல எங்களுடன் வந்துநிற்பான். அவனுடைய இரகசியத்தொடர்புகள்குறித்து ஓரளவுக்குத் தெரிந்தாலும், நான் அவனிடம் எதையுமே கேட்பதில்லை. கேட்டாலும் அவன் சொல்லப்போவதில்லையென்பதையும் அறிவேன்.

இப்படியாக இரண்டுவிதமான மனோநிலைகளையுடைய நண்பர்கள் எனக்கிருந்தார்கள். நான் அவர்களுடன் இறுக்கமான நட்பினைப் பேணிக்கொண்டேன். பல்கலைக்கழக அனுமதியை வித்தியாசமான உலகுக்கான திறவுகோலென்றும் சொல்லலாம். எல்லாப்பக்கங்களிலிருந்தும் வருகின்ற மாறுபட்ட உணர்வுள்ளவர்களுடன் பழகுகின்ற அனுபவமும், அந்த அனுபவங்களைப் படிப்படியாக உள்வாங்கிக்கொள்கின்ற பக்குவமும் அலாதியானவை. அங்கு படிக்கின்ற பலருடைய வாழ்க்கையின் இயங்குதிசையே இறுதியில் முற்றாக மாறிவிடுவதுண்டு. எனக்கு அந்த நாள்கள் இப்போதும் நினைவிலிருக்கின்றன.

சமாதானப் பேச்சுகளுக்கு முந்திய அச்சுறுத்தல்கள் நிரம்பிய காலப் பகுதி. எங்களுடைய நியாயமான கருத்துகளைப் பொதுவெளிக்குக் காட்டவேண்டிய தேவைப்பாடுகள் உணரப்பட்டபோது, அகிலனை எமக்காக முன்னிறுத்தியிருந்தோம். அவனிடம் மற்றவர்களுக்கிருந்த ஈர்ப்பினையும், அவனுடைய தன்முனைப்பையும் நாங்கள் சரியாகப் பயன்படுத்த விரும்பினோம். ஆண்கள் விடுதியின் முதலாம் மாடியில் ஒதுக்குப்புறமாயிருந்த அறையொன்றில் மாணவர் மன்றங்களின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் நடைபெற்றிருந்தது. அதில் பங்குபற்றிய எல்லோரும் எமக்கு ஆதரவான நிலைப்பாட்டையே கொண்டிருந்தனர்.

அகிலன் ஆரம்பத்தில் எங்கள் நடவடிக்கைகளில் ஈடுபாடுகாட்டாது ஒதுங்கியிருந்தான். அத்துடன், உயிராபத்துக்குறித்த அச்சத்தினை வெளிப்படுத்திக் கொண்டேயிருந்தான். அவனை எங்களுக்குச் சார்பாக மாற்றுவதற்கு நானும், வினோதனும் நிறையச் சிரமப்படவேண்டியிருந்தது. நான் வினோதனுடைய உக்கிரமான வார்த்தையாடல்களை அன்றுதான் முதன்முறையாகக் கேட்டேன். கடைசியில் நாங்கள் அகிலனை ஒருவாறு சம்மதிக்கவைத்து விட்டோம்.

அடுத்தவாரம், நாங்கள் குறித்துவைத்திருந்த ஒருநாளில் பொங்கிப் பெருகியிருந்த மக்கள் வெள்ளத்தின் மத்தியில், அகிலன் மஞ்சள்நிறமான ஆடையை அணிந்து மேடையேறினான். அவன் மைதானத்திலே கூடியிருந்த மக்களைப் பார்த்ததும் மிகுந்த உற்சாகமடைந்தான். தூயதமிழிலே தேர்ந்தெடுத்த வார்த்தைகளைப் பயன்படுத்தி எடுப்பாக முழங்கினான். மக்கள் உணர்ச்சியின் பெருமழைக்குள் நனையத்தொடங்கினார்கள். அன்று அவனுடைய துணிச்சலான பேச்சைக்கேட்டு நாங்களே ஆச்சரியப்பட்டுப் போனோம். அன்றிலிருந்து அகிலனுடைய நடவடிக்கைகள் முற்றிலுமாக மாறிவிட்டன. அதற்குப் பின்னரான சமாதானப்படலத்தில் அவன் எப்போதும் மஞ்சள்பூசிய ஆடைகளையே அணிந்துகொண்டான். 'அந்த நிறம் மக்களுக்குப் பிடித்தமானது என்பதால், தனக்கும் அது விருப்பமானது' என்பான்.

போர்நெருக்கடிகள் மீளவும் ஆரம்பித்த நாள்களில் வினோதன் எங்களைவிட்டு விலகிச்செல்லத் தொடங்கியிருந்தான். அவன் பல்கலைக்கழகத்துக்கு வருவதேயில்லை. அவன் எங்குபோனான் என்பதை நான் ஊகித்து அறிந்திருந்தேன். நான் படிப்பை முடித்தபின்னர், எனக்குப் பிடித்த ஊடகத்துறையில் நுழைந்து விட்டேன். அப்போதைய சூழ்நிலையில் அது ஆபத்தானது என்றாலும் நான் பொருட்படுத்தவில்லை. அகிலன் கொழும்பில் இருப்பதாகப் பேசிக்கொண்டார்கள். எங்கள் மூவருக்குமிடையிலான தொடர்புகள் முற்றாகவே அற்றுப் போயிருந்தன.

இறுதிப்போர் ஓய்ந்து சில வருடங்களில் அகிலன் சுவரொட்டிகளிலே விதம் விதமாகச் சிரிக்கத்தொடங்கியிருந்தான். பின்னர் அவன் மக்கள் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்டபோது, நான் அதையிட்டு ஆச்சரியப்படவில்லை. வினோதன் புனர்வாழ்வின்பின் விடுவிக்கப்பட்டுப் பெற்றோருடன் தங்கியிருப்பதையறிந்து அவனைப் போய்ப்பார்த்தேன். என்னுடன் பேசுவதற்கு அவனிடம் வார்த்தைகள் இருக்கவில்லை. நான் அவனைப் புரிந்துகொண்டேன். ஆற்றாமையின் பெருந்துயருள் அமிழ்ந்திருப்பவனிடம் எதைப் பேசமுடியும்? இறுதிப்போர்குறித்த அனுபவங்களை அவனிடமிருந்து பிடுங்கிக்கொள்ளவும் நான் முயற்சிக்கவில்லை. அவ்வப்போது அவனாக ஏதாவது கூறிக்கொள்வான். அந்தச் சொற்கள் யாவும் வீழ்ந்துபட்ட ஓர் இனத்தின் வாக்குமூலமாகவேயிருக்கும். இழக்கப்பட்ட தன்னுடைய காலைப்பற்றி அவன் ஒருபோதும் கவலைப்பட்டதேயில்லை. ஆனால், வயோதிப நோயாளிகளான பெற்றோருக்குத் தான் சுமையாக இருப்பதைப்பற்றியே அவன் சிந்தித்துக்கொண்டிருப்பான். நான் என்னால் முடிந்தவரை அவனுக்குத் தேவையான உதவிகளைச் செய்திருக்கிறேன். அவனுக்கு நிரந்தர வருமானத்தைத் தரக்கூடிய தொழிலொன்றை ஏற்படுத்தலாம் என்ற எண்ணம் எனக்குள் ஏற்படுவதுண்டு. அகிலனைப்போன்ற ஒருவரின் சிபாரிசு இருந்தால் நிச்சயமாக ஏதாவது செய்யலாம் என்பது எனக்குத் தெரியும். அவன் எங்களுடைய நண்பன் என்பதால் நிச்சயமாக உதவுவான் என்ற நம்பிக்கையும் எனக்கிருந்தது. அந்த நம்பிக்கையிலேயே அவனுடைய அலுவலகத்துக்கு வந்தோம். உண்மையில் வினோதனுக்கு இங்கு வருவதற்குத் துளிகூட விருப்பமில்லை. நானாகக் கட்டாயப்படுத்தி அழைத்து வந்திருந்தேன்.

சஞ்சீவி
சிறுகதை

அலுவலகத்தின் வாசலில் வரிசையாகப் போடப்பட்டிருந்த கதிரைகள் நிரம்பி விட்டன. எம்மைப்போலப் பலர் ஏதேதோ தேவைகளுக்காக வந்திருந்தார்கள். நான் வினோதனைப் பார்த்தேன். அவன் தூரத்திலுள்ள பனைமரங்களை வெறித்தபடியிருந்தான். அவனுடைய ஊன்றுகோல் பக்கத்திலுள்ள சுவரிலே சாய்த்து வைக்கப்பட்டிருந்தது.

அவனை மெல்லச் சுரண்டினேன்.

"வினோ! என்ன கடுமையா யோசிக்கிறாய்?"

அவன் தன்னுடைய வலதுகாலைச் சரிப்படுத்தியபடி என்னைத் திரும்பிப் பார்த்தான். அவனுடைய பார்வையிலிருந்த உணர்வுகளை என்னால் புரிந்து கொள்ளமுடிந்தது.

"உள்ளுக்கு ஏதோ அவசரமான கூட்டம் நடக்குதெண்டு சொன்னவங்கள். அது முடிஞ்சபிறகுதான் அகிலன் வருவான்" நான் வினோதனிடம் சொல்லிக் கொண்டேன். ஏற்கனவே அலுவலக உதவியாளரிடம் வினோதனின் பெயரைக் குறிப்பிட்டு அகிலனைச் சந்திக்க விரும்புவதாகச் சொல்லியனுப்பியிருந்தேன். 'அகிலனுக்கு எத்தனை வேலைகள் இருக்கும்! அவன் அந்தக்காலத்திலேயே பொதுவேலைகளைத் தேடிப்போய்ச் செய்துகொண்டிருப்பான். இப்போது அரசியல் அதிகாரங்களுடன் இருப்பவனால் காரியங்களை எவ்வளவு இலகுவாகக் கொண்டுநடத்தமுடியும்! காலம் எவ்வளவு விசித்திரமானது! ஒருவரை எப்படியான இடங்களிலெல்லாம் கொண்டு போய் வைத்து அழகுபார்க்கிறது!' நான் எனக்குள்ளே சமாதானம் செய்துகொண்டேன். அலுவலகத்தின் வாசற்கதவை மறுபடியும் பார்த்தேன். அது மூடியிருந்தது. மனதில் வெறுமையுணர்வு படரத்தொடங்கியது. சற்றுநேரத்தின்பின்னர் அந்த உதவியாளன் வெளியே வந்தான். நான் எழுந்துநின்றேன்.

"கொஞ்சம் பொறுங்கோ அண்ணை. ஐயாவிட்டைச் சொல்லியிருக்கிறன். கட்டாயம் உங்களைக் கூப்பிடுவார்" அவனாகவே முந்திக்கொண்டு சொன்னான்.

"கூட்டம் முடியேல்லையோ?" இலேசான எதிர்பார்ப்புடன் கேட்டேன்.

"கூட்டம் எப்பவோ முடிஞ்சுது. ஐயா பிரதேச அமைப்பாளர்களோட கதைச்சுக் கொண்டிருக்கிறார்"

"இளங்கோவும், வினோதனும் வந்திருக்கிறாங்களெண்டு இன்னொரு தடவை சொல்லுங்கோ. நாங்கள் அவரோடை பல்கலைக்கழகத்திலை ஒண்டாகப் படிச்சனாங்கள்"

என்னுடைய வார்த்தைகளைக் கேட்டபின், அந்த உதவியாளனுடைய போக்கில் மாற்றமேற்பட்டது.

"சரி சேர். நான் இப்பவே போய்ச் சொல்லிறன்" என்றவாறு திரும்பவும் அலுவலகத்தினுள் நுழைந்தான்.

நாங்கள் மீண்டும் காத்திருக்கத்தொடங்கினோம். நேரம் பன்னிரண்டுமணியைத் தாண்டிவிட்டது. வினோதன் சோர்வுடன் இருப்பதாக எனக்குத் தெரிந்தது. அலுவலகத்துக்கு எதிரேயிருந்த கடைக்குப்போய் இரண்டு சோடாக்களை வாங்கிவந்தேன். நாங்கள் அவற்றைக் குடித்துக்கொண்டிருக்கும்போது அகிலன் அலுவலகத்திலிருந்து வெளியேறி வருவது தெரிந்தது. அவன் வாகனத்தைநோக்கி விரைவாக நடந்துபோனான். உதவியாளன் ஓடிப்போய் வாகனத்தின் கதவைத் திறந்துவிட்டான். நான் சட்டென்று எழுந்து அவனை நோக்கிச் சென்றேன். "அகிலன்!" அவன் திரும்பி என்னைப் பார்த்தான். "டேய் இளங்கோ! என்ன இந்தப் பக்கம்?" என்னை நெருங்கித் தோளை வளைத்துக் கொண்டான். அவனுடைய கண்கள் எனக்குப் பின்னால் நகர்ந்து வினோதனை அவதானித்துத் திரும்பின.

"உன்னைப் பார்க்கிறதுக்காக ஒன்பது மணியிலையிருந்து இருக்கிறம்"

"தெரியும்தானே மச்சான்! இண்டைக்கு மிக முக்கியமான கூட்டம். நான் இல்லாமல் இவங்களைக் கட்டி மேய்க்கேலாது"

'சரியான மேய்ப்பர்கள் இல்லாவிட்டால் மந்தைகளை மேய்க்கமுடியாது என்பது உண்மைதான்' எனக்குள் நினைத்துக்கொண்டேன்.

"சரி அதைவிடு. அவனைப் பார். எங்கட வினோ" சற்றுத்தூரத்தில் அமர்ந்திருக்கும் வினோதனைச் சுட்டிக்காட்டினேன். அவனை வருமாறு சைகை செய்தேன். வினோதன் மெதுவாக எழுவதற்கு முயற்சித்தான். "எந்த வினோ?" அகிலன் முகத்தை இயல்பாக வைத்துக்கொண்டு கேட்டான்.

"எங்களோட படிச்ச வினோதன்" அகிலனை ஒருமாதிரிப் பார்த்துக்கொண்டு சொன்னேன்.

அவன் 'தெரியாது' என்பதைப்போல உதட்டைப் பிதுக்கினான்.

"அகிலன்! உண்மையாகவே உனக்கு வினோதனைத் தெரியாதோ?" என்னுடைய வார்த்தைகளில் சூடேறியது.

"மறந்திட்டன் மச்சான்! கம்பசாலை வெளிக்கிட்டுக் கனகாலம் தானே? சரி... இப்ப அவசரமாகப் போகவேண்டியிருக்கு. எங்கட பெரியவர் கொழும்பிலையிருந்து வந்துகொண்டிருக்கிறார். அவரைச் சந்திக்கவேணும். நான் உன்னைப் பிறகு பார்க்கிறன் என்ன?" அவன் வாகனத்தில் ஏறிக்கொண்டான். வினோதனைத் திரும்பியும் பார்க்கவில்லை.

நான் அப்போதுதான் அகிலனுடைய ஆடையைக் கவனித்தேன். அவன் நீல நிறமான ஆடையை அணிந்திருந்தான். அவனுடைய வெளிநாட்டுவாகனமும் அதே நிறத்தில் இருந்தது. அந்த வாகனம் ஓசையெழுப்பாமல் விரைந்து செல்வதை ஏமாற்றத்துடன் பார்த்துக்கொண்டு நின்றேன். என் மனம் இறுகிக் கனத்தது. யாரோ என் தோளைத் தொடுவதை உணர்ந்து திரும்பினேன். வினோதன் வலதுகையில் ஊன்றுகோலைக் கொழுவியபடி சரிந்தவாறு நின்றிருந்தான். அவனுடைய முகத்தில் இலேசான புன்னகை தெரிந்தது.

அந்தப் புன்னகை எனக்குள் ஆயிரம் அர்த்தங்களை விதைக்கத்தொடங்கியது.

*(நன்றி: கலைமுகம் 2017)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்தாங்கு கல்





ஒரு மறைந்து போன நாகரிகத்தின் தரிசனங்கள்

# யாழ்ப்பாணத்தில் நாகரும் தமிழும் பௌத்தமும்



சி. பத்மநாதன்
தகைசார் பேராசிரியர்
பேராதனைப் பல்கலைக்கழகம்
வேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கையிலே ஆதிகாலம் முதலாகத் தமிழ் மொழி பேசும் சமூகங்களிடையிற் பௌத்த சமயம் பெற்றிருந்த செல்வாக்கினைப் பற்றிய புரிந்துணர்வு இந்நூற்றாண்டு தொடங்கியதன் பின்பு கணிசமான அளவில் முன்னேற்றங் கண்டுள்ளது. அது இங்குள்ள பெருந்தொகையான தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் அடையாளங் காணப்பட்டமையின் விளைவாகும். அதன் பலனாக மறைந்தும் மறந்தும் போய்விட்ட ஒரு வரலாற்றை மீட்டுக்கொள்ளமுடிகின்றது.

மகாவம்சம், மணிமேகலை போன்ற நூல்களும் பிராகிருத மொழியிலுள்ள பிராமிக் கல்வெட்டுகளும் பெயர்கள் பொறித்த பௌத்த சமய வழிபாட்டுச் சின்னங்கள், சேதியங்கள் போன்ற கட்டடங்களின் அழிபாடுகளும் மற்றைய ஆதாரங்களாகும். இவை பெரும்பாலும் ஆதிவரலாற்றுக்காலம் (கி.மு.300-கி.பி.500) தொடர்பானவை.

எட்டாம் நூற்றாண்டு முதலான காலத்தைப் பொறுத்தவரையில் தமிழ்மொழிக் கல்வெட்டுகள் முதன்மை பெறுகின்றன. அவற்றில் விபரங்கள் கூடுதலாகக் கிடைக்கின்றன. இதுவரை எல்லாமாகப் பௌத்தசமயம் தொடர்பான 27 கல்வெட்டுகள் அடையாளங்கண்டு, அவற்றின் வாசகங்களும் மைப்படிகளின் புகைப்படங்களும் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றிலே கல்வெட்டு எழுதப்பட்ட காலத்தில் ஆட்சிபுரிந்த அரசனின் பெயர், அவனது ஆட்சியாண்டு, நன்கொடை வழங்கியவரின் பெயர், அதனைப் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் பெயர், அது அமைந்திருந்த இடம் என்பன பற்றிய விபரங்கள் சொல்லப்படும். அவற்றின்மூலம் பௌத்தப்பள்ளிகளுக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்புகளைப் புரிந்து கொள்ளமுடியும். அத்தகைய தமிழ்க் கல்வெட்டுகள் திருகோணமலை, அநுராதபுரம், பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் கூடுதலாகக் கிடைத்துள்ளன.

**நாகரும் பௌத்தசமயமும்**

இயக்கரும் நாகரும் இலங்கையின் ஆதியான குடிகளாவர். தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் அவர்களை முறையே இடைக்கற்கால (Mesolithic Culture) பண்பாட்டு மக்கள், பெருங்கற்கால/ஆதி இருப்புக்காலப் பண்பாட்டு (EIAC) மக்கள் என அடையாளம் காணலாம். இடைக்கற்காலப் பண்பாட்டு மக்களான இயக்கர் இலங்கையில் கி.மு.28,000 வருடங்கள் வாழ்ந்தனரென்று கொள்ளப்படும். இலங்கையில் ஆதி இரும்புக்காலப் பண்பாடு கி.மு. ஒன்பதாம் நூற்றாண்டளவில் பரவத்தொடங்கியது. அது பெரும்பாலும் தமிழகத்துக் கரையோரங்கள் வழியாகப் பரவியது. நாகர் தமிழ்மொழி பேசியவர்கள் என்பது ஆதி இரும்புக்காலப் பண்பாட்டின் அடையாளங்களான ஈமக் கல்லறைகளிலுள்ள கல்வெட்டுகளினால் உறுதியாகின்றது. பதவிகம் பொலவில் காணப்படும் பள்ளிப்படை, இவ்வன்கட்டுவ என்னுமிடத்திலுள்ள ஈமக் கல்லறைகள் என்பவற்றிலுள்ள கல்வெட்டுகள் இதற்கான ஆதாரங்களாகும். அவை தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளன. அவற்றை ஆதியான தமிழ்ப் பிராமி வடிவங்களில் எழுதியுள்ளனர்.

அந்தக் கல்வெட்டுகள் நாகரைப் பற்றியவை. அவற்றில் மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த வேளிரின் பெயர்கள் இரு சிறிய வசனங்களில், மீண்டும் மீண்டும், கிரயாபூர்வமாக மேல்வருமாறு எழுதப்பட்டிருக்கும்:

*வேள் ணாகன் மகன் வேள்*
*கண்ணன்*
*வேள் கண்ணன் மகன்*
*வேள் ணாகன்.*

இவ்வன்கட்டுவவிலுள்ள கல்லறைகளில் வைக்கப்பட்டிருந்த மட்கலன்களின் வெளிப்புறத்தில் இவை மீண்டும் மீண்டும் தொடர்ச்சியாக அமைக்கப்பட்டுள்ளன. ஈமக் கல்லறைகளிலுள்ள வசனங்களை நாகர் வீட்டுப்பாவனைப் பொருள்கள், பொதுப் பாவனைக்குரிய பொருள்கள், வழிபாட்டுச் சின்னங்கள் முதலானவற்றில் எழுதியுள்ளமை விநோதமானது.

கட்டுமானப் பொருள்களான தூண்தாங்கு கற்கள், நீர்விநியோகம் தொடர்பான கிணற்றுப்பிட்டி, மடு, ஏரி போன்றவற்றின் அணைக்கட்டுகள், செக்கு, உரல், அம்மி-குளவி, மட்கலன்கள், கட்டுமானங்களின் அடித்தளங்கள் முதலானவற்றில் அவற்றைப் பதித்துள்ளனர். அது பரதகண்டத்துச் சமுதாயங்களில் அவர்களுக்கு மட்டும் சிறப்பாகவுரிய வழமையாகும். நாகவழிபாடு, சிவலிங்கவழிபாடு என்பன நாகர் மூலமாவே இலங்கையில் பரவலாகின. சிவலிங்கம், திருசூலம், வேல் போன்ற சைவசமயச் சின்னங்களும் ஸவஸ்திக வடிவமும் ஆதி இரும்புக் காலத்து மட்கலங்களில் அமைந்த குறியீடுகளில் இடம்பெற்றுள்ளன. அத்தகைய மட்கலவோடுகள் தமிழகத்திலும் இலங்கையிலும் கிடைத்துள்ளன. இலங்கையில் பௌத்தசமயம் பரவிய பின்பு நாகரில் பலர் அதில் ஈடுபாடு கொண்டனர். குடியிருப்புப் பகுதிகளில் பௌத்த சின்னங்களை அமைத்து வழிபாடு செய்தனர். அவர்கள் வாழ்ந்த இடங்களில் நாகவழிபாடு, சிவலிங்க வழிபாடு என்பவற்றுக்குரிய சின்னங்கள் காணப்படுகின்றன. நாகர்வழிபாட்டில் சைவர், பௌத்தர் என்ற வேறுபாட்டு உணர்வுகள் அக்காலத்தில் வெளிப்படவில்லை. அதனால் வெவ்வேறான முறைகளை அவர்களால் சமயபேதமின்றிப் பயன்படுத்த முடிந்தது.

**பொதுவான கடவுட் பெயர்களும் தலப்பெயர்களும்**

நாகர் ஐந்தலை நாகவடிவத்தைக் கடவுளின் சின்னமாக வழிபட்டனர். அதனை மணிணாகன் என்று குறிப்பிடுவது வழமை. சிவலிங்க வழிபாட்டிலும் பௌத்தசமய வழிபாட்டிலும் இடம்பெறும் வழிபாட்டுச் சின்னங்களிலும் அதே பெயரை எழுதியுள்ளனர். நாகர் அமைத்த ஐந்தலை நாக சிற்பங்களிற் பெரும்பாலானவற்றில் மணிணாகன் என்ற பெயர் எழுதப்பட்டிருக்கும். அதேபோல புத்தர் படிமங்களிலும் புத்தர் பாதம், சேதியம் போன்றவற்றிலும் அந்தப் பெயரைப் பொறிப்பது நாகரின் வழமையாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள குசலான் மலையின் அடிவாரத்திலே ஐந்தலை நாகவடிவம், புத்தர் பாதம் என்பனவற்றின் உருவங்கள் ஒன்றன் அருகில் மற்றொன்றாக அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடற்குரியது. இரண்டிலும் மணிணாகன் என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. நாகவழிபாட்டு முறையைப் பின்பற்றிய தமிழ்மொழி பேசும் நாகரிடையில் பௌத்தசமயம் செல்வாக்குப் பெற்றிருந்தமைக்கு இவ்விரு வழிபாட்டுச் சின்னங்கள் அடையாளமாகும்.

நாகரின் வேறுபட்ட சமய வழிபாட்டுச் சின்னங்கள் வேறு தலங்களிலும் ஒரே இடத்தில் இருந்தன. மட்டக்களப்பு மாவட்டத்துக் கோவில்குளம் என்னுமிடத்திலுள்ள தலமொன்றில் லிங்க வடிவம், புத்தர் படிமம், ஐந்தலை நாக உருவம் ஆகியன கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அதேபோல, கிளிநொச்சி மாவட்டத்து உருத்திரபுரத்தில், ஏறக்குறைய 18 நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட சைவ வழிபாட்டுச் சின்னமாகியலிங்கம், நாகவழிபாட்டுச் சின்னமாகிய ஐந்தலை நாக வடிவம் என்பன இன்றும் காணப்படுகின்றன. அவை ஒரு சிறிதளவான நிலப்பரப்பில் காணப்படுகின்றன.

நாகர் அமைத்துள்ள கட்டுமாணங்கள் அனைத்திலும் அவர்களின் குலமரபுச் சின்னமாகவும் வழிபாட்டுச் சின்னமாகவும் விளங்கிய நாக வடிவம் அமைக்கப்பட்டிருக்கும்.

நாகர் தாந்தாமலையில் உருவாக்கிய பௌத்தப் பள்ளியின் தூண்கள் சிலவற்றில் நாகவடிவத்தைச் செதுக்கியுள்ளனர். வழிபாட்டுக்குரிய தேவர்களையும் புத்தர், போதிசத்துவர் முதலானோரையும் வழிபாட்டுச் சின்னங்களையும் பொதுமையில் மணிணாகன் என்று குறிப்பிட்டதைப்போன்று வழிபாட்டு நிலையங்களான கோட்டங்கள் எல்லாவற்றையும் மணிணாகன் பள்ளி என்று நாகர் குறிப்பிட்டனர். அவற்றிலே புழங்கிய கலன்களையும் அவ்வாறு குறிப்பிட்டனர்.

மணிணாகன் பள்ளி என்ற பெயர் எழுதிய தொல்பொருட் சின்னங்களை வந்தாறுமூலையிலுள்ள அளவில் சிறிய சிவன்கோயில் அம்மன்கோயில் என்பவற்றிலே தான் முதன் முதலாக அடையாளங் காணமுடிந்தது. அங்குள்ள சிவன் கோயில் வளாகத்தில் நிலத்திலே கிடந்த உருளை வடிவமான தூண்துண்டம் ஒன்றில் மணிணாகன் பள்ளி என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. அதனை இலகுவாக அடையாளங் காணமுடிந்தது. இரண்டாவது தடவை அதனைப் பார்க்கச் சென்றபொழுது, அதன் கோலம் உருமாறிவிட்டது. சிறிய கோட்டமொன்றை அமைத்து, அதனை அதில் லிங்கமாகப் பிரதிஷ்டை செய்துள்ளனர். அதிலே நின்ற கோலமான சிறுத்தைப்புலியின் வடிவமும் தமிழ்ப் பிராமி வடிவங்களில் எழுதிய மணிணாகன் பள்ளி என்ற பெயரும் தெளிவாகத் தெரிகின்ற சிவன் கோயிலில் வரலாற்றுச் சிறப்புடைய வேறிரு சின்னங்களையும் காணமுடிந்தது. அவற்றிலொன்று அளவில் சிறிய நந்தியின் சிற்பம். அதில் மணிணாகன் என்ற பெயர் காணப்படுகின்றது. மூன்றாவது உருப்படி பித்தளை வார்ப்பான கைவிளக்கு அதிலே மணிணாகன் பள்ளி என்ற பெயர் ஈரிடங்களில் உலோகக் கருவியினால் வெட்டப்பட்டுள்ளது. மணிணாகன் பள்ளி என வழங்கிய கோட்டத்திற்குரிய பொருள் என்பதால் அதன் பெயரை விளக்கில் பொறித்துள்ளனர். அவ்வாறு பெயரிடப்பட்ட விளக்குகளும் வேறு வகையான பொருள்களும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பலவிடங்களில் கிடைத்துள்ளன.

இதுவரை நாகரின் பாவனைக்குரிய பொருள்களில் மணிணாகன், மணிணாகன் பள்ளி என்ற பெயர்களையும் மூன்று தலைமுறைகளைச் சேர்ந்த வேளிரான நாகரின் பட்டப் பெயர்களையும் குறிப்பிடும் இரு சிறிய வசனங்களும் அமைக்கப்பட்டிருக்கும் என்பதை இதுவரை கவனித்தோம். இவை அண்மைக்கால ஆய்வுகளின் மூலம் கிடைத்த விபரங்கள் பலருக்கு இது இன்னும் புரிந்துகொள்ளமுடியாத விடயம்.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வயல்

○ கோகுலராகவன்

வயல் இரண்டு விதங்களில் அற்புதமானது. முதலில் உலகுக்கு உணவளிக்கிறது.

வயல் பெருவாரியான நெல்லை உற்பத்தி செய்யக்கூடிய பெரும் நிலப்பரப்பு.
வயல் எமக்கு பெருந்தொகை உணவளிக்கும் ஒரு அட்சய பாத்திரம்.
நீங்கள் ஒரு புறாவை நினைத்துப்பார்க்க வேண்டும்.
அது நாள் முழுதும் இல்லாவிட்டாலும் பறக்கும், ஓய்வெடுக்கும் நேரம் தவிர பத்து மணி நேரமாவது உணவு தேடி உண்ண வேண்டும்.
அது தானியத்தை ஒவ்வொன்றாகத் கொத்தித்தான் தன் வயிற்றை நிரப்பியாகவேண்டும்.
நீங்கள் ஒரு பெருங்காட்டில் தனித்து விடப்படுகின்றீர்கள். உங்களுக்கான உணவு எப்படிக் கிடைக்கும்? வேட்டை ஆட வல்லமையற்றவர் என நீங்கள் கருதப்பட்டால்.
உங்கள் உணவு காட்டுப்பழங்களாக அமையும். காட்டுப்பழங்கள் மிகச் சிறியவை.
ஆகவே நீங்கள் நாள் முழுதும் அவற்றைச் சாப்பிட்டால்தான் உங்கள் பசி அடங்கும்.

**வயல்கள் இல்லாவிட்டால் தரையில் மழை வீழ்ச்சி இருக்காது ,கடலிலேதான் இருக்கும். காட்டில் நிகழும் ஆவியீர்ப்பை விட வயலில் நிகழும் ஆவியீர்ப்பு அதிகமானது, இலகுவானதும் கூட. வயலில் வரம்பு என்கிற அமைப்பு நீர் ஓடி விடுவதைத் தடுக்கும் சிறிய அணை.**

வேட்டைக்கு மிருகம் கிடைக்காத நாள்களில் - வயல்கள் உருவாக முன்பு - இதுவும் மனித வாழ்வின் ஒரு வாழ்க்கை முறையாக இருந்தது.
இந்த வாழ்வியலின் கடினத்தன்மையே
தானியங்களை பெருவாரியாக உற்பத்தி செய்வதற்கு அடிப்படையான வயல் உருவாகக் காரணம்.
மனித இனம் தப்பிப் பிழைக்க வழிவகுத்த முதற்படி. வயல்கள் இல்லாவிட்டால் உலகம் எப்போதோ அழிந்திருக்கும்.
நெல்,உற்பத்தியின் ஆரம்பம் சீனா என்கிறார்கள்.
ஆனால் அது இந்தியாவில், தமிழ்நாட்டில் நிகழ்ந்திருக்கவே அதிக வாய்ப்பிருக்கிறது.
இதற்கு சங்க இலக்கிய நூலான புறநானூறு

*"ஏர் பரந்த வயல்*
*நீர் பரந்த செறுவின்*
*நெல் மலிந்த மனை*
*பொன் மலிந்த மறுகின்."*

எனக்கூறும்.
தமிழர்க்கும் நெற்செய்கைக்கும் நீண்ட தொடர்பு உண்டென்பதை இது காட்டுகின்றது.



## இருந்து கதைப்பம்


ஔவையார் "வரப்புயர" என்று பாடியதும் வயலின் நீண்ட கால வரலாற்றை கூறுவதாக அமையும். ஒரு நெற்கதிரில் 150 நெல்மணிகள் இருக்கும். இதுவே நெல் விளைச்சல் அதிகமாகக் கிடைக்க காரணமாகி விடுகிறது. ஐந்து பேர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு 10 பரப்பு வயல் ஒரு வருடம் முழுவதும் சாப்பிடக்கூடிய நெல்லைத் தரும். இலங்கையின் பரப்பளவில் 14 வீதமான பகுதி பயிர்ச் செய்கை நிலமாகும். 5500 சதுர கிலோமீற்றர் வரை நீர்ப்பாசன நிலமும் இருக்கின்றது. மொத்தமாக 65000 ஹெக்ரெயருக்கு மேல் நெல் உற்பத்தி நடைபெறுகிறது. வயல்களில் அடுத்த நன்மை மிகப்பெரியது. மாரியில் மட்டுமே பெய்கின்ற மழை நீரை .கடலில் கலக்கவிடாமல் தரையிலே தேக்கி வைக்கிற மாபெரும் பொறிமுறையை வயல்கள் கொண்டுள்ளன. எல்லா நீரையும் குளத்திலோ, அணைக் கட்டிலோ சேமிக்க முடியாது. தரை முழுவதையும் குளமாக்குவதும் பொருத்தமற்றது. அதனால் வயல்களே மாரிகாலத்தில் தற்காலிகக் குளங்களாக மாறுகின்றன. இதனால் வறட்சி ஏற்படாமல் பிரதேசங்கள் குளிர்மையாக இருக்க வழி செய்கின்றன.
அடுத்த ஆண்டு மழைவீழ்ச்சிக்கான ஆவியீர்ப்பு நிகழ்வதற்கான வாய்ப்பை ஊக்குவிக்கின்றன. தரைக்கீழ் நீரைச் சேமிக்க வயல்வெளிகள் உதவுகின்றன. உவர் நீர்த்தரைகள் நன்னீர்த் தரைகளாக நாளடைவில் மாறிவிட வழிவகுக்கிறன. இதுவே வயல்கள் செய்யும் அளப்பரிய உதவி. இந்தளவு பரந்த பிரதேசத்தில் மழைநீரைத் தேக்கி வைக்கின்ற உபாயம் வயல்களால் உருவான ஒன்று.இது மனிதனின் அற்புதமான கண்டுபிடிப்பு.
வயல்கள் இல்லாவிட்டால் தரையில் மழை வீழ்ச்சி இருக்காது.கடலிலேதான் இருக்கும்.காட்டில் நிகழும் ஆவியீர்ப்பை விட வயலில் நிகழும் ஆவியீர்ப்பு அதிகமானது,இலகுவானதும் கூட. வயலில் வரம்பு என்கிற அமைப்பு நீர் ஓடி விடுவதைத் தடுக்கும் சிறிய அணை. இதை அடிப்படையாகக் கொண்டேகரிகாற் சோழன் காவிரிக்கு கல்லணை கட்டி வேளாண்மையைப் பெருக்கினான்.
இந்தச் சிந்தனை தமிழர்களின் வழிதோன்றியது.
உலகில் பழைய அணை என்றால் அது கரிகாற் சோழன் கட்டிய காவிரிக் கல்லணைதான்.
வயல், சோறு தரும் சொர்க்கம் மட்டுமல்ல, பூமியைக் காக்கும் நீர் நிறையும் பரந்த இதயமும் கூட.



# ஊர்ப்புதினம்

பாகம் 2

○ இராகவன்



இந்தக் கிழமை ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரரின்ரை தோற்றப்பொலிவைப் பற்றிச் சொல்லுறன். அதில பெரிசா ஒண்டும் யோசிக்கிறதுக்கில்லை. உங்களுக்கெல்லாம் அநேகமா பாடகர் மலேசியா வாசுதேவனைத் தெரிஞ்சிருக்கும். ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரரும் அச்சொட்டா பாடகர் மலேசியா வாசுதேவனைப் போலவேயிருப்பார். குரலும் கிட்டத்தட்ட அதேமாதிரித்தானிருக்கும். சிலவேளை ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரர் பாடவெளிக்கிட்டிருந்தால் ஈழத்து 'மலேசியா வாசுதேவன்' என அழைக்கப்பட்டிருப்பார். இதிலும் பகிடி என்னெண்டால் எங்கடை பள்ளிக்கூடத்தில வாத்திமாருக்குப் பட்டம் வைக்கிற பொடியளுக்கு மலேசியா வாசுதேவனைச் சரியாத் தெரியாது எண்டதால ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரர் மலேசியா வாசுதேவனாகவில்லை.

15

ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரருக்கு இன்னுமொரு பெருமையுமிருக்கு. எங்கடை பள்ளிக்கூடத்தில முதல்முதலா செயின் கொழுவின மூக்குக்கண்ணாடி போட்டவரும் அவர்தான். ஏயெம் எண்டது அவரின்ர இனிஷியல். அதாவது அ.ம.ஜெபரத்தினம் எண்டு சொல்லியிருக்கிறன். சரி இப்ப நாங்கள் விசயத்துக்கு வருவம்.
நான் ஏற்கனவே நவரத்தினம் மாஸ்ரரைப் பற்றிச்சொல்லியிருக்கிறன். அவர் தன்ரை வீட்டிலயிருந்து சைக்கிள்ள தான் பள்ளிக்கூடத்துக்கு வாறவர் எண்டும் சொல்லியிருக்கிறன். இன்னுமொரு நவரத்தினம் மாஸ்ரரும் எங்கடை பள்ளிக்கூடத்தில படிப்பிச்சவர். அவர் தமிழும், அளவையியலும் படிப்பிக்கிறவர். அதுகும் அளவையியல் படிப்பிக்கிறதில வலுவிண்ணன். அதால அவரை 'லொஜிக் நவம்' எண்டுதான் சொல்லுறவை. யாழ்ப்பாண ஏரியா முழுக்க அளவையியலுக்கு எஸ்.எஸ். மனோகரன் பேமஸ் எண்டால் வடமராட்சி முழுக்க அளவையியலுக்கு லொஜிக் நவம் தான் பேமஸ். ஊதிவிட விழுந்து போகிற தோற்றத்தில அவரிருப்பார். ஆள் அவ்வளவு மெல்லிசு. அதுக்குள்ள 'வண் ரூ பைவ்' (125) மோட்டச்சைக்கிள்ளதான் அவர் பள்ளிக்கூடத்துக்கு வருவார். அதுமட்டுமில்லை அப்ப எங்கட பள்ளிக்கூடத்துக்கு மோட்டச்சைக்கிள்ள வாற ஒரேயொரு மாஸ்ரரும் அவர்தான். அதால அவரை மோட்டச்சைக்கிள் நவரத்தினம் எண்டுதான் சொல்லுவினம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org